விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15.02.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்

100 வீத சாதாரண போட்லான்

சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## எகிப்தின் அதிபரை ஒபாமா வீட்டுக்கு அனுப்பினார்

# மேற்குலக அடக்குமுறைக்கு இலங்கை அடிபணியக் கூடாது!

### ஜனாதிபதி கூறியதாக திவயின தகவல்



(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் மூன்றாம் உலக நாடுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்காக இலங்கையையும் இந்தச் சக்திகள் அடக்க முயற்சித்ததாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உடற்பயிற்சி செய்யும் விதத்தை காண்பதற்காக அலரிமாளிகைக்குச் சென்ற திவயின பத்திரிகையின் ஆசிரியர் காமினி சுமணசேகரவிடம் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

திவயின பத்திரிகையின் ஆசிரியர் ஆச்சரியப்படும் வகையில் ஜனாதிபதி உடற்பயிற்சியில் ஈடுபட்டதுடன் அங்குள்ள தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அமெரிக்க ஜனாதிபதியின் பேட்டியைப் பார்த்துவிட்டு ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி உடற்பயிற்சிகளை முடித்ததும் சர்வதேச அரசியல் குறித்து விவாதிப்பதாகவும் அமெரிக்காவும், மேற்குலகநாடுகளும்மூன்றாம் உலக நாடுகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாகவும் எகிப்து ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பும் தேவை ஒபாமாவுக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளதுடன் அவற்றுக்கு இலங்கை அடிபணியக் கூடாது எனவும் குறிப்பிட் (20ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் வெள்ளைவான் 5 பேர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் வெள்ளை வானுடன் நீண்டநேரம் தரித்து நின்ற 5 பேரை நேற்றிரவு சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் ஒருவர் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள வீதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் 6பேர் நீண்ட நேரமாக வெள்ளை வானுடன் தரித்து நின்றனர்.

இது தொடர்பில் தகவல் அறிந்த சாவகச்சேரி பொலிஸார் நேற்றிரவு 9 மணியளவில் அவ்விடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது. (20ஆம் பக்கம் பார்க்க)

# கருணாவுக்கும், கே.பிக்கும் பொது மன்னிப்பு வழங்க முடியாது!

## சட்ட வல்லுநர்கள் விவாதம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்களான பிரதியமைச்சர் கருணா அம்மான் மற்றும் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் ஆகியோருக்கு இலங்கை சட்டக் கோவைகளின் பிரகாரம் எந்தக் கட்டத்திலும் பொது மன்னிப்பு வழங்க முடியாது என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)



## பாலித ஹோகனவுக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டு வழக்கு

### புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் ஏற்பாடு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்த வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகன மீது சர்வதேச நீதிமன்றில் போர்க் குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு தொடரப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட போரின் இறுதிக் கட்டத்தில் சர்வ (19ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக்கு புதிய கப்பல் சேவை அமைச்சர் டக்ளஸ் ஆரம்பித்துவைப்பு



(நெடுந்தீவு)

நெடுந்தீவு மக்களின் கடற் போக்குவரத்திற்கு வசதியாக சகல வசதிகளுடனும் கூடிய சிறிய ரகக் கப்பல் வட தாரகை–II நேற்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று இக் கப்பல்சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. 800இலட்சம் ரூபாய் செலவில் கொழும்பு டொக்யாட் தளத்தில் நிர்மாணிக்கப்பட்ட இக்கப்பல்சேவையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிகாட்டுவான் இறங்குதுறையில் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து புறப்பட்ட கப்பல் நயினாதீவுத் துறையை சென்றடைந்து அங்கு நயினாதீவு நாகபூசணி ஆலயம் மற்றும் நாகவிகாரையில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. சமய வழிபாடுகளைச் தொடர்ந்து நெடுந்தீவுக்கான பயணம் தொடர்ந்தவேளை, நெடுந்தீவு கடற்தொழிலாளர்கள் தமது படகுகள் அணி மூலம் புதிய கப்பலுக்கு வரவேற்பளித்தனர். தொடர்ந்து நெடுந்தீவின் மாவலித் துறையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் பொதுக் (19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் சில வாக்குச்சாவடிகளுக்கு 70 கி.மீ.தூரம் பயணிக்கவேண்டியுள்ளது

### ஐ.தே.கட்சியின் பொதுச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் புகழ் சீக்கிரமாகக் குறைந்து வரும் நிலைமையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்களின் ஆதரவு அரசாங்கத்திற்கு இருப்பதாக பலவந்தப்படுத்தல்கள் மூலம் காட்டுவதற்கு முயற்சிக்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

அத்தநாயக்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் தேர்தலில் மேற்கொண்டு வரும் சட்டவிரோத பிரசாரங்கள், வன்முறைகள் அதிகரித்து வருகிறது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தேர்தல் பிரசாரங்களுக்கு பாரியளவில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் கலந்துரையாடினோம். வடக்கில் வாக்களிப்பதில் காணப்படும் தடைகள் பற்றி தேர்தல் ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தோம். (20ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

## ஆங்கில எழுத்தாக்கம்
## தேசிய மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

2009ஆம் ஆண்டு தேசிய மட்ட ஆங்கில தினப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி துஷிதா மனோகரன் ஆங்கில எழுத்தாக்கத்தில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

வடமராட்சி கல்வி வலயத்தில் ஆங்கில எழுத்தாக்கல் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற மாணவி என்ற பெருமையை துஷிதா பெற்றுக் கொண்டார். (ந)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290

**இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
**Sri Lanka Red Cross Society**
யாழ் - கிளை Jaffna Branch
**காரைநகர் பிரிவு**
**Karainagar Division**

SRI LANKA RED CROSS SOCIETY

**தொண்டர்கள் கௌரவிப்பு விழா**
*Volunteers Appreciation*

காலம் : 16.02.2011 புதன்கிழமை காலை 10.00 மணி
இடம் : கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் நடராசா ஞாபகார்த்த மண்டபம் காரைநகர்

தலைமை
திரு. சோ.விக்னேஸ்வரன். J.P (Whole Island)
தலைவர், இலங்கை செஞ்சிலுவை சங்கம்-காரைநகர் பிரிவு

பிரதம விருந்தினர்
பேராசிரியர் V.K. கணேசலிங்கம் J.P
B.Sc. Hons (Ceylon), M.Sc.(Hawaii), Ph.D(London), Hons.D.Sc.(Sri Lanka)
தலைவர், இலங்கை செஞ்சிலுவை சங்கம்-யாழ்-கிளை

சிறப்பு விருந்தினர்கள்
பேராசிரியர் கா.குகபாலன் M.A, Ph.D
புவியியற்துறை யாழ்-பல்கலைக்கழகம்
திரு. R.T. ஜெயசீலன்
உதவி அரசாங்க அதிபர்-காரைநகர்
திரு.கு.பாலகிருஸ்ணன் J.P
கௌரவ செயலாளர்
இலங்கை செஞ்சிலுவை சங்கம் -யாழ் -கிளை

கௌரவ விருந்தினர்கள்
திரு.பொ.சிவானந்தராசா
அதிபர், கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம்
திரு.ச. குகராஜன்
நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை செஞ்சிலுவை சங்கம்-யாழ்-கிளை

கௌரவம் பெறுபவர்கள்
- திரு.இ.ச.பேரம்பலம் நாகரத்தினம் அவர்கள்
- ஆளுனர் சபை உறுப்பினர்கள்
- தொண்டர்கள்

(அ-2450)

கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
**இலங்கை செஞ்சிலுவை சங்கம்**
**காரைநகர் பிரிவு.**

## இரத்ததானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நேற்று 70ற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் இரத்ததானம் வழங்கினர்.

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.வைத்தியசாலைகளில் இரத்தப் பற்றாக்குறையாகவுள்ளதாக தெரிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு இரத்ததானம் வழங்க முன்வந்தமை பாராட்டுக்குரியது எனத் தெரிவிக்கப்பட்டது.(ந-6)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)

கிளி.முழங்காவில் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக முழங்காவில் கட்டளைத் தளபதி கே.எல்.எஸ். எஸ்.லியனகம கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ச-3-84)

## மெய்வல்லுநர் போட்டி

யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப.1.30மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு.ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் வலி-கிழக்கு பிரதேச சபை செயலாளர் திருமதி ஜெயந்தா சோமராஜ் கலந்து கொள்வார்.சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா, புத்தூர் வாதரவத்தை கிராம அலுவலர் திரு ஐ.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந)

**விற்பனைக்கு**

லான்மாஸ்டர் (குவாட்டர்) யப்பான் (புதியது),கலப்பை, டிஸ் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு
0777750391
(3821)

**யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை**
**வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி-2011**

காலம் : 16.02.2011 புதன்கிழமை பி.ப. 1.30 மணி
இடம் : கல்லூரி மைதானம்
தலைவர்: திரு.சு.புண்ணியசீலன் (கல்லூரி அதிபர்)

பிரதம விருந்தினர்: திரு.வைரமுத்து ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம் வடமாகாணம்)
சிறப்பு விருந்தினர்: திரு.பொ.கமலநாதன் அவர்கள்
(முன்னைநாள் அதிபர், யா/யூனியன் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை. பாடசாலைச் சமூகம்
(3804)

**வடமராட்சியில் தொழிற்பயிற்சி நெறிகள்**

புதிய பிரிவு ஆரம்பம்: 18.02.2011, 19.02.2011
**யாழ். தொழில்நுட்ப கல்விமையம்**
தொழில் வாய்ப்பு பயிற்சி நிறுவன ஆதரவுடன்

1. இலத்திரனியல் (Electronics) TV and CD மற்றும் இலத்திரனியல் சாதனங்கள் திருத்தற் பயிற்சி நெறி.
2. மின் தொழில்நுட்பம் Electrical Wiring and Motor Rewinding சகல மின் உபகரணங்களும் திருத்துதல் பயிற்சி.
3. குளிர்சாதன இயந்திரங்கள் திருத்துதல் Airconditioning and Refrigeration
4. வாகனங்களுக்கான மின் இணைப்பு D.C Wiring
5. குழாய் பொருத்துனர் பயிற்சி நெறி Plumbing

- வெளிக்கள செய்முறைப் பயிற்சியின் போது ஊக்குவிப்புப் பணம்

1ஆம் கட்டை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
தொடர்பு:- T.P.: 0779152617, 021 5671023
(தம்பசிட்டி பாடசாலை அருகாமையில்)
(3820)

**ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்**

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் அவர்களது அன்புத் தந்தை

**கப்றியேல் ஜோசப்**

அவர்கள் 03.02.2011 அன்று காலமானதையிட்டுத் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், சக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
வேலணை பிரதேச சபை.
(பி-2451)

St John Ambulance SRI LANKA

**வைத்தியசாலைத் தொண்டர் சேவைக்கு ஆட்சேர்ப்பு**

சென்ஜோன் அம்புலன்ஸ் ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலையில் தொண்டர்களாக சேவை புரிந்தோர் வைத்தியசாலை ஊழியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டதனால் அவர்களின் வெற்றிடத்திற்கு புதிய தொண்டர்களைச் சேர்த்துக் கொள்ளவுள்ளோம். இவர்கள் சேவை செய்யும் நாட்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். இத்தொண்டர் சேவையில் இணைந்து சேவையாற்ற விரும்பும் ஆண்,பெண் இருபாலாரும் எதிர்வரும் 19.02.2011 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென்ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு நேரில் சமுகந்தரவும்.

குறிப்பு:- சென்ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிச் சான்றிதழ் வைத்திருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு இலக்கம்:- 021 222 3166

சென்ஜோன் அம்புலன்ஸ்
யாழ்.மாவட்டம்.
(3815)

அவசர அம்புலன்ஸ் சேவை தொடர்பு இலக்கம்:- 021 3214444

**E.N.T.CLINIC நடாத்தும்**
**இலவச கண் பரிசோதனை முகாமும்**
**இலவச கண்ணாடி வழங்கலும்**

40வயதுக்கு மேற்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 100 பயனாளிகளுக்கு மேற்கொள்ளப்படும் சேவை.பயனாளிகள் முன் கூட்டியே உங்கள் பெயர்களை E.N.T.CLINICஇல் பதிவு செய்து கொள்ளவும்.

பதிவு செய்யும் இடம்: E.N.T.CLINIC,
22,24 MUNEESWARAN ROAD,JAFFNA. (H.N.B. அருகில்)
திகதி: 16.02.2011

இலவசமாக கண்ணாடி வழங்குபவர்கள்.S.M.FERNANDO நிறுவனத்தினர்.
(3818)

# இன்று ஒரு தகவல்

## அன்னை உள்ளம்

வயதான . அம்மா ஒருவர் தினமும் தவறாமல் கோயிலுக்குப் போய் கடவுளிடம் வேண்டிக் கொள்வார்.

என்ன வேண்டிக் கொள்வார் தெரியுமா?

"நான் இறந்துபோனால் நேராக நரகத்துக்குப் போய்ச்சேர வேண்டும். அதற்கு அருள்புரிய வேண்டும்." என்று வேண்டிக் கொள்வார்.

தினமும் இந்த அம்மா இப்படி வேண்டிக்கொள்வதை அந்தக் கோயிலில் உள்ள ஒருத்தர் கவனித்துக் கொண்டேவந்தார்.

ஒருநாள் நேராகவே கேட்டு விட்டார்.

''அம்மா... எல்லோரும் சொர்க்கத்துக்குப் போக வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். ஆனால், நீங்கள் நரகத்துக்குப் போகவேண்டும் என்று கடவுளிடம் வேண்டுதல் செய்கிறீர்களே... இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டார்.

இதற்கு அந்த அம்மா சொன்னாராம்:

"ஐயா நான் நரகத்துக்குப் போய்ச் சேர வேண்டும் என்று ஆசைப்படுவது உண்மைதான். அதற்கு என்ன காரணம் என்றால்... எனக்கு ஒரு மகன் இருக்கிறான். நீண்டகாலமாக எனக்குப் பிள்ளை இல்லாமல் இருந்து... அதன்பின் இவன் பிறந்தான். ஒரேபிள்ளையென்பதால் அவனை மிகவும் செல்லமாக வளர்த்துவிட்டேன்.

ஆனால், அவன் சேரக் கூடாதவர்களோடு சேர்ந்து மிகவும் கெட்டுப்போய் விட்டான். பஞ்சமா பாதங்கள் அத்தனையும் செய்கிறான்.

அவன் செய்யும் பாவச் செயல்களுக்கு நிச்சயமாக அவனுக்குச் சொர்க்கம் கிடைக்காது. அவன் நரகத்துக்குத் தான் போவான். அதில் சந்தேகமில்லை.

அவன் நரகத்துக்குப் போனால் ரொம்பவும் கஷ்டப்படுவான். அங்கே அவனை யாருமே கவனிக்கப் போவதில்லை.

அதனால் அவனுக்கு முன்னால் நான் அங்கே போய்ச் சேர்ந்து விட்டேன் என்றால்... அவன்வந்து சேர்ந்ததும் அவனைக் கவனித்துக் கொள்ள முடியும்" என்றாராம் அந்த அம்மா. தாயுள்ளம் என்பது இதுதான். இதற்கு ஈடாக வேறெதனையும் சொல்ல முடியாது.

அன்னை தெரேசா நிறுவி நடத்திக் கொண்டு வந்தாரே 'மிஷனரீஸ் ஒவ் சாரிட்டி' அங்கேயுள்ள அறிவுப் பலகையில் உள்ள வாசகம் என்ன தெரியுமா?

'நோயாளிகளை இங்கு அழைத்து வராதீர்கள். மருத்துவர்களால் கைவிடப்பட்டவர்களை மட்டும் இங்கு விட்டுச் செல்லுங்கள்' என்று அதில் எழுதி வைத்திருந்தார்களாம்.

இந்த உலகத்தில் மனிதர்களால் கைவிடப்பட்டவர்களுக்குச் சேவை செய்பவர்களை ஏற்கனவே பார்த்திருக்கிறோம்.

மருத்துவர்களாலேயே கைவிடப்பட்டவர்களுக்குச் சேவை செய்பவர்களை இதற்கு முன்னர் நாம் பார்த்ததில்லையே!

அப்படிப்பட்ட அன்னை தெரேசா...

வெள்ளிக்கிழமை இரவுணவை முடித்துக் கொண்டு சிறிது நேரம் பிரார்த்தனை செய்திருக்கிறார். அதன்பின் படுக்கைக்குப் போயிருக்கிறார்.

தண்ணீர் குடிக்க முயற்சி செய்த போது டம்ளர் தவறி கீழே விழுந்திருக்கிறது.

நெஞ்சுவலி....

எத்தனையோ பேரின் சுவாசக் காற்றுக்கு காரணமாக இருந்த அவர் சொன்ன கடைசி வார்த்தைகள்.

'இனிமேல் என்னால் சுவாசிக்க முடியாது!'

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இந்துக்குருமார் மற்றும் இந்திய சிற்பிகள்

## இலங்கையில் விசா பெறுவதற்கான நடைமுறை

இலங்கையிலுள்ள ஆலயங்களில் பூஜைக் கடமைகளை மேற்கொள்ளும் இந்துக் குருமார் மற்றும் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் சிற்பிகள் போன்றவர்களுக்கு இங்கு தங்கியிருந்து பணி புரிவதற்கு வதிவிட விசா அவசியமானதாகும்.

இத்தகையோருக்கான நுழைவு மற்றும் வதிவிட விசாவுக்குரிய சிபார்சினை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமே மேற்கொண்டுள்ளது. எனவே திணைக்களத்திற் பதிவு செய்துள்ள ஆலயங்களை சார்ந்த பரிபாலன சபையினர் தமது ஆலயங்களில் இத்தகையோரின் பணி அவசியப்படும் போது திணைக்களத்திற்கு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விசாவுக்குரிய சிபார்சினை பெற்றுக் கொள்ளமுடியும்.

ஆலய பரிபாலன சபையினர் இந்தியக்குருமார், சிற்பிகள் தொடர்பாக தமது பிரதேசத்தின் கிராம சேவையாளரினூடாக பிரதேச செயலாளருக்கு ஆலயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணி மற்றும் தங்கியிருக்க வேண்டிய காலம் என்பவற்றைத் தெரிவித்து அவரது உறுதிப்படுத்தல் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுதல் கட்டாயமானதாகும்.

திணைக்களப் பணிப்பாளர் குறித்த விண்ணப்பத்தையும் ஆவணங்களையும்' புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பர். செயலாளர் அவற்றை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளருக்கு முன்னிலைப்படுத்திய பின் விசா அனுமதிக்கப்படும்.

திணைக்களம் கோரும் ஆவணங்கள் இணைக்கப்படாத பட்சத்தில் விசாவுக்கான சிபாரிசு நிரா கரிக்கப்படலாம் என திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் *ஆறுதலின் அறிவுப் பயணம்...* என்ற கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் **பாடசாலைகளில் பெற்றோரின் பங்கு** எனும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி.கலாமணி கருத்துரைக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

❖ ❖ ❖

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இலங்கை பொருளாதாரத்தின் பலமும் பலவீனமும் என்ற கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளச் சந்தியில் அமைந்துள்ள யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வின் அறிமுகவுரையை சமூக விஞ்ஞான படிப்பு வட்டச் செயலாளர் க.வேல்தஞ்சன், தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

விரிவுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சந்திரசேகரம் நிகழ்த்தவுள்ளார்.

இவ்விரிவுரையின் பின் கலந்துரையாடல் இடம்பெறும். இக்கருத்தரங்கிற்கு அறிவியல், சமூக, பொருளாதார, அரசியல், ஆர்வலர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 240 | 200 | 230 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 50 | 45 |
| பச்சைமிளகாய் | 280 | 300 | 250 | 240 |
| தக்காளி | 140 | 160 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 90 | 120 | 80 | 90 |
| கரட் | 100 | 150 | 120 | 100 |
| பூசணி | 50 | 80 | 70 | 45-50 |
| புடோல் | 100 | 120 | 130 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 260 | 280 | 270 | 200-250 |
| பெரிய வெங்காயம் | 60 | 100 | 80 | 70 |
| பாகற்காய் | 130 | 200 | 150 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 140 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 70 | 60 |
| பயற்றங்காய் | 200 | 240 | 230 | 200 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 100-110 |
| பீற்றூட் | 120 | 160 | 130 | -- |
| கறிமிளகாய் | 250 | 300 | 270 | 200 |
| போஞ்சி | 160 | 200 | 210 | 180 |
| கத்தரிதம்புள்ள | 180 | 240 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 20 | 10-15 |
| தேசிக்காய் | 40 | 80 | 60 | 30-40 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 60 | 55 | 35-60 |

# இராசி பலன்

*15.02.2011*
*(மாசி, 3 செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு*
*துவாதசி முன்னிரவு 8.09 மணிவரை*
*திருவாதிரை முற்பகல் 8.44 மணிவரை*
*இராகுகாலம் 3.33-5.03 மணிவரை*
*சுபநேரம் 11.03-12.33 மணிவரை*

**மேடம்** தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிப்பைப் பெருக்க நினைப்பீர்கள், சகோதர ஒற்றுமை மேலோங்கும்.

**இடபம்** உறவினர்களின் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், உத்தியோக உயர்வுண்டு, குடும்பத்தில் குதூகலமான சம்பவங்கள் நடைபெறலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** பெண்தெய்வவழிபாட்டால் பெருமைகாண வேண்டியநாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் கிடைக்கும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.

**கடகம்** தூரத்து உறவினர் வருகையால் சில செலவுகள் அதிகரிக்கலாம், அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், மனச்சஞ்சலம் உண்டு.

**சிங்கம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், பொருளாதார நிலை உயரும், எடுத்த காரியம் கை கூடும், பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**கன்னி** அந்நியர் உதவியால் பெருமையடைவீர்கள் , செய்தொழிலில் மேன்மையும் உயர்ச்சியும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, முயற்சி கைகூடும்.

**துலாம்** தொழில் வளர்ச்சியில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், கனிவான பேச்சுக்களால் காரியங்களைச் சாதிக்க வேண்டிய நாள், திடீர் பயணங்களால் நன்மை ஏற்படலாம்.

**விருச்சிகம்** இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் அக்கறை காட்டுவீர் வீர்கள்.

**தனுசு** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் சிலரை தேடிச் சென்று சந்திப்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், செல்வாக்கான நாள்.

**மகரம்** உடல்நலம் சீராகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், நண்பர்கள் மூலம் சுபசெய்திகள் வந்து சேரும்.

**கும்பம்** உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மீனம்** தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு வந்து சேரலாம், தாயின் உடல்நலம் சீராகும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறலாம், வாகன சுகமுண்டு.

வளவன்



இலங்கை சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடக்கிலிருந்து தெற்கிற்கான துவிச்சக்கரவண்டிப் பவனி நேற்று யாழ். பொதுநூலகத்திற்கு முன்பாக ஆரம்பமானது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் பிரதம சாரணர் ஆணையாளர் பேனாட் பட்டுவான்கல ஆகியோர் உரையாற்றுவதையும் விருந்தினர்கள் பவனியில் பங்குபற்றும் சாரணர்களோடு நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார், எஸ்.கரன்)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம்

(கரவெட்டி)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கிற்கு உட்பட்ட 30 கழகங்களுக்குரிய பயிற்றுநர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் இன்றும் நாளையும் நாளை மறுதினமும் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமில் யாழ். மாவட்டத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் தரம் ஏயில் கடமையாற்றும் பயிற்றுநர். பா. முகுந்தன் மற்றும் ஏ.அனுராகாந்தன் , எஸ். வசந்தன் ஆகியோர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர் என்று பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் செயலாளர் ரி. வரதராயன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையின் பழைய பாடத்திட்டத்திற்கமைவான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 18, 19, 20, 21 ,22 ஆகிய திகதிகளில் நடைபெறுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே, கலாசாலையில் நூனசித்தி பெற்ற விண்ணப்பித்த ஆசிரிய மாணவர்களை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு காலாசாலை அதிபர் ம. இக்னேசியஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மெற்றாஸ் மயிலின் முதலாமாண்டு நினைவுதினம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடாத்தும் அமரர் செல்லையா மெற்றாஸ் மயிலின் முதலாமாண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பி.ப.4 மணிக்கு யாழ்/ இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத் தலைவர் லயன் டாக்டர் வை. தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் அமரரின் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்ன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா. சிவசந்திரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க. கலாமணி, யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் பொ. ன். பாலசுந்தரம்பிள்ளை, தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக உறுப்பினரும் இளைப்பாறிய அதிபருமான சி.தார்சீசியஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-3)

## புண்ணிய நாச்சியம்மையார் தினம்

(அல்வாய்)

யாழ்.சைவ பரிபாலான சபையினரால் புண்ணிய நாச்சியம்மையார் தினம் எதிர்வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபைத் தலைவர் சிவநெறி புரவலர் த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்திராக யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் காலை 7 மணிக்கு வண்ணை நீராவியடி கடையிற் சுவாமி தேவஸ்தானத்தில் விசேட பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்குதிருமுறையோதல் மு.ப 9.15 மணிக்கு பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெற்ற மாணவர்களின் பரிசளிப்பு நிகழ்வு ஆகியன இடம் பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து 10 மணிக்கு சைவப் பரிபாலன சபை சமயப் பிரசார அமைச்சர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தவுள்ளார்.

மேலும் 10.15 மணிக்கு யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வு, 11.15 மணிக்கு குறள் வழி பெரிதும் வலியுறுத்துவது அறத்துப் பால் கருத்துக்களா ? பொருட்பால் கருத்துக்களா? என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறப்புரையை கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் ப.கணேஷன் நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-3-19)

## நோய்களுக்கான பாதுகாப்பு ஆலோசனையும் முகாமைத்துவமும் பற்றிய கருத்தரங்கு

(அல்வாய்)

சுதேச வைத்திய துறையூடாக நோய்களுக்கான பாதுகாப்பு ஆலோசனையும் முகாமைத்துவமும் பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு யா/ தும்பளை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில்நீரிழிவு முகாமைத்துவமும், குழந்தை மருத்துவம், வாதரோகம், பொதுமருத்துவம் போன்ற விடயங்கள் பற்றிய கருத்தரங்கை வைத்திய கலாநிதி ரி. விஜயகுமார் ,வைத்திய கலாநிதி க.க. யோகநாதன், வைத்திய கலாநிதி எஸ். செல்வலிங்கம்,வைத்திய கலாநிதி பா. தசீந்திரன், வைத்திய கலாநிதி திருமதி ச.சறோயினி ஆகியோருடன் ஏனைய வடமராட்சி வடக்கு வைத்தியர்களும் வழங்கவுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் வருகை தந்து பயனுள்ள வைத்தியக் கருத்துக்களை அறிந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (ஸ்ரீ-3-19)

## வன்னிப் பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றி வந்தோருக்கு அபராதம்

(அல்வாய்)

வன்னிப் பிரதேசத்திலிருந்து சட்டவிரோதமாக மாடுகளை ஏற்றிவந்த இரண்டு சந்தேக நபர்களை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது ,

வன்னிப் பிரதேசத்திலிருந்து அனுமதிப் பத்திரமின்றி ஏழு மாடுகளை வாகனமொன்றில் சாவகச்சேரி பகுதிக்கு கொண்டு வந்த வேளை இரு சந்தேக நபர்களை கைது செய்த பொலிஸார் நேற்றையதினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி செல்லையா கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி சந்தேக நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் இருவருக்கும் தலா 2500 ரூபா அபராதமும் மாடுகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பிணை முறியிலும் வாகனத்தை 20 இலட்சம் ரூபா பெறுமதியான பிணை முறியிலும் எடுக்க உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-24)

## கரப்பந்தாட்டப்போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டு கழகங்களுக்கிடையிலான இருபாலாருக்குமிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு கரவெட்டி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளதாக கரவெட்டி பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் எஸ். அனுராகாந்தன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை பொது நூலகத்தில் காணப்படுகின்ற பழைய பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவை எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்நூலகத்தில் வைத்து ஏலத்தில் விடப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோசவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் திருவிழா நடைபெறும். இதில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மஞ்சத்திருவிழாவும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை கைலாய வாகனத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தண்டிகை உற்சவமும் நடைபெறும். (ஸ்ரீ-2)

## நிர்வாகசபைக் கூட்டம்

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குட்பட்டசனசமூக நிலையங்களின் சமாசத்திற்கான நிர்வாக சபைக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நகராட்சி மன்ற மண்டபத்தில் சமாசத் தலைவர் க.கஜீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு ஒவ்வொரு சனசமூக நிலையங்களிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதிகளை சமுகமளிக்கும் படி சமாசச் செயலாளர் செ. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## அனலைதீவு சதாசிவ மகா வித்தியின் 125 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய 125 ஆவது ஆண்டுச் சிறப்பு விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வித்தியாலய அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, அதிஉயர் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன், ஊர்காவற்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். பாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-9)

## தேவாரத் திருமுறை இறுவெட்டு வெளியீடு

சைவ நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்ட தேவாரத் திருமுறைகளான கோளாறு பதிகம், இடர் களையும் பதிகம், திருநீற்றுப் பதிகம், நமச்சிவாயத் திருப்பதிகம், பொன் பெற்ற பதிகம் ஆகியன இராசையா ஸ்ரீ தரனினால் பாடப் பெற்று இறுவெட்டாக வெளிவந்துள்ளது.

இவ் இறுவெட்டை பெற்றுக் கொள்ள விரும்புவோர் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம். (ஸ்ரீ)







யாழ்.வேம்படி உயர் தரப்பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வையும் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வெற்றிக்கிண்ணத்தைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# புத்தரின் தந்தங்களை இலங்கைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

2600 ஆவது புத்த ஜெயந்தியை முன்னிட்டு இந்தியாவில் தேசிய நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள புத்தபகவானின் தந்தத்தை இலங்கைக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமர் மன்மோகன்சிங்கிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த தந்தங்கள் இலங்கைக்கு எடுத்து வரப்படவுள்ளன.

19ஆம் நூற்றாண்டு கபிலவஸ்துபுர பிரதேசத்தில் இந்தத் தந்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த நிலையில் பல நூற்றாண்டுகளுக்கு பின்னர் இந்த தந்தங்கள் இலங்கைக்கு எடுத்துவரப்படுகின்றன. (ஶ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு யாழிலிருந்து 5 ஆயிரம் எழுத்து மூலமான முறைப்பாடுகள்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மட்டும் 5 ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அறிக்கையொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

அவ்வாறு யாழ்ப்பாணத்திலிருந்து ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் 5ஆயிரம் முறைப்பாடுகள் எழுத்து மூல முறைப்பாடுகள் என்று அதன் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் ஆணைக்குழுவானது தென்னிலங்கை மக்களின் சாட்சியங்களைப் பதிந்து கொள்ளவுள்ளது.

அதன் முதற்கட்டமாக எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாத்தறை நகர மண்டபத்திலும் மறுநாள் சனிக்கிழமை காலி நகர சபை மண்டபத்திலும் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஶ்ரீ-2)

# பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனியார் கம்பனியாக மாற்றப்படுமா?

## ஐ.தே.க. கேள்வி

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனியார் கம்பனியாக மாற்றப்படுவதற்கு திட்டமுள்ளதா என்பது தொடர்பில் பெற்றோலிய வள அமைச்சர் பொதுமக்களுக்கு பகிரங்கமாக தெளிவுபடுத்த வேண்டும் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்தது.

இவ்விடயம் தொடர்பில் அமைச்சர் கட்டாயம் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று தெரிவித்தார்.

(ஶ்ரீ-2)

# மீனவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

சோமாலியா கடற்கொள்ளையர்களால் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களை விடுதலை செய்வது தொடர்பிலான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு கென்யாவிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்கு வெளிவிவகார அமைச்சு தகவல் அனுப்பியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பொது தொடர்பால் பிரிவு நேற்று தெரிவித்தது.

குறித்த படகிலிருந்து ஐந்து இலங்கை மீனவர்களே சோமாலியா கடற்கொள்ளையர்களால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி 22ஆம் திகதி பேருவளை பகுதியிலிருந்து சென்ற இவர்கள் கடற்கொள்ளையர்களால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-2)

# அமெரிக்கத்தூதுவர் பற்றீசியா யாழ்ப்பாணக்கல்லூரிக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிற்கு அண்மையில் விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் அம்மையார் யாழ்ப்பாணக்கல்லூரிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

1823 ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரியினரால் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரிக்கு அமெரிக்கத் தூதுவர் விஜயம் மேற்கொள்வது மரபாகும்.

இம் மரபிற்கேற்ப பற்றீசியா புட்டினிஸ் அம்மையார் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு விஜயம் மேற்கொண்டார்.

கல்லூரியின் இசைக்குழுவினரின் இசை வாத்தியத்தோடு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு வரவேற்கப்பட்ட அவர் அண்மையில் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட புதிதாக அமைக்கப்பட்ட வீராங்கனைகள் தங்குமிட விளையாட்டு அறையினை திறந்து வைத்து உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

அமெரிக்க மிஷனரிமாரின் அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் சேவை மனப்பான்மையையும் நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்து இப்பாரம்பரியத்தில் இக் கல்லூரி அதிபர், ஆசிரியர் சேவையாற்றுகின்றமையைப் புகழ்ந்ததோடு இக்கல்லூரி மாணவர்களும் நல்லறிவினைப் பெற்று சமூகத்திற்கு சேவை புரிய நல்லாசிகளைத் தெரிவிப்பதாக கூறினார்.

கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் போது புட்டினிஸ் அம்மையாரின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விஜயத்தின் அடையாளமாக மலைவேம்பு மரம் ஒன்று அவரினால் நாட்டப்பட்டது. (ஶ்ரீ-2-5)

# தமிழர் பாரம்பரியத்தை சீரழிக்கும் நடவடிக்கையை அனுமதிக்க முடியாது

## கிழக்கு பல்கலை. ஒன்றியம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பாரம்பரியத்தை சீரழிக்கும் வகையில் நடவடிக்கைகள் இடம் பெறுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதுவரை மக்களின் நலன்களில் அக்கறை செலுத்தாத அமைப்புகள் குறிப்பிட்ட நோக்கத்துக்காக பல்கலைக்கழக நடவடிக்கையில் தலையிடுவதை வன்மையாக கண்டிப்பதாக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்காவை கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்திக் குழு சந்தித்தது தொடர்பில் கேட்டபோதே அதன் தலைவர் இவ்வாறு தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# இலங்கையின் மனிதவளம் பயன்படுத்தப்பட வேண்டும்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையில் உட்கட்டுமான அபிவிருத்திகள் அவசியமானவை.அதுவே பொருளாதார அபிவிருத்திக்குப் புதிய தளத்தை உருவாக்கிக் கொடுக்கும். எனினும் இலங்கையின் மனித வளத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், சமவுரிமை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பவை அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உள்ளூரிலேயே தயாரிக்கப்பட்ட தீர்வு ஒன்றே காணப்பட வேண்டும் என்பதை தாம் அறிவதாக குறிப்பிட்டுள்ள அவர் இதற்காக சம சந்தர்ப்பம் மற்றும் திறந்த தொடர்பாடல் என்பன அவசியம் என தெரிவித்துள்ளார். (ஶ்ரீ)

# சோமாலிய கடற்கொள்ளையர்களினால் ஐந்து இலங்கை மீனவர்கள் கடத்தல்

பேருவளையில் இருந்து ஆழ் கடல் மீன் பிடியில் ஈடுபடச் சென்ற ஓஷன் 4 என்றமீன்பிடிபடகுடன் அதில் இருந்த 5 மீனவர்களை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி சோமாலியாவுக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் வைத்து இந்த மீன் பிடிபடகு கடத்தப்பட்டுள்ளது என மீன்பிடி அமைச்சுக்கு கடந்த 13ஆம் திகதி தகவல் கிடைத்துள்ளது. தாம் கடத்தப்பட்டுள்ளதை மீனவர்கள் வயர்லெஸ் தொலைபேசி மூலம் அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

கடத்தப்பட்டுள்ள மீனவர்கள் பேருவளை, முல்லப்பிட்டிய, தலமுள்ள, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங் களை சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் சோமாலிய கடற் கொள்ளையர்களிடம் சிக்கிய பின்னர் விடுவிக்கப்பட்ட தர்ஷன 6 என்ற ஆழ்கடல் மீன் பிடி படகு இலங்கை நோக்கி திரும்பிக்கொண்டிருப்பதாகவும் அந்த படகு மடகஸ்கார் கடற்பரப்பை கடந்து வந்து கொண்டிருப்பதாக மீன் பிடி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தர்ஷன 6 படகில் இருந்து இரண்டு மீனவர்களை சோமாலியக் கடற்கொள்ளையர்கள் சுட்டுக்கொன்றனர். எஞ்சிய மூன்று மீனவர்களே நாடு திரும்பி கொண்டிருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஓஷன் 4 என்ற ஆழ்கடல் மீன்பிடி படகு கடந்த ஜனவரி 22ஆம் திகதி பேருவளை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து புறப்பட்டுள்ளதுடன் 22 நாட்களின் பின்னர் கடந்த சனிக்கிழமை கடற் கொள்ளையர்களிடம் சிக்கியுள்ளது. (ஸ்ரீ-2)

# சனத்தொகை கணக்கெடுப்பு மூன்று கட்டங்களாக முன்னெடுப்பு

(கொழும்பு)

இவ்வருட நடுப்பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள சனத்தொகைக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளதாக புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

1981ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு -கிழக்கு உள்ளிட்ட நாடளாவியரீதியில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

கடந்த 2001 ஆம் ஆண்டு நாட்டில் சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டாலும் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை.

அட்டவணை தயாரித்தல், பட்டியல்படுத்தல் மற்றும் கணக்கெடுத்தல் என்ற மூன்று கட்டங்களாக இம்முறை சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என்று புள்ளிவிபரவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# ஹைகோர்ப் வழக்கின் தீர்ப்பு வழங்கமுன் உயர் நீதிமன்ற விளக்கம் ஆராயப்படும்

## கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

ஹெகோர்ப் மோசடி தொடர்பிலான வழக்கின் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் உச்ச நீதிமன்றம் வழங்கிய விளக்கத்தை ஆராய வேண்டியுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ நேற்று திறந்தநீதிமன்ற விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளப்பட்ட நீதிமன்றமாக உச்ச நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட விளக்கம் தொடர்பிலான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி மனுதாரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் உத்தர விட்டுள்ளார்.

ஹைகோர்ப் கொடுக்கல் வாங்கலில் நிதி மோசடி இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டு மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன் சேகா மற்றும் அவரின் மருமகன் ஆகியோர் மீது இந்த வழக்கு விசா ரணை இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் இராணுவ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவுக்கு சமனான மனு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்குமானால் அதனை விலக்கிக் கொள்ள முடியும் என பிரதிவாதியின் சட்டத்தரணி வாதிட்டார்.

இத னையடுத்தே நீதிபதி இந்த உத்தரவை வெளியிட்டார். (ஸ்ரீ-2)

# பேஸ்புக் பாவனையாளர்கள் 100பேரின் கணக்குகள் முடக்கம்

சமூக இணைப்பு இணையத் தளங்களில் ஒன்றான பேஸ்புக் இலங்கையைச் சேர்ந்த சுமார் 100 பாவனையாளர்களின் கணக்குகளை முடக்கி உள்ளது.

பேஸ் புக் மூலமாக குற்றச் செயல்கள், துஷ்பிரயோகங்கள் ஆகியவை அதிகரித்துள்ளமையே மேற்படி கணக்குகள் முடக்கப்படுவதற்கான காரணம் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேநேரம் கணக்கை குற்றச் செயல்களுக்காக பயன்படுத்தும் இலங்கையைச் சேர்ந்த பாவனையாளர்களின் விபரங்களும் பேஸ்புக்கிடம் தயார் நிலையிலுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# முறையான வடிகால் கட்டமைப்புகள் மூலம் வெள்ளப் பாதிப்பை குறைக்கலாம்

## புவியியற்துறை பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்குபகுதிகள் உள்ளிட்ட கரையோரப் பகுதிகளில் ஏற்படுகின்ற பெரும் வெள்ள அனர்த்தங்களின் சேதங்களை முறையான வடிகால் கட்டமைப்பு மூலம் குறைக்கலாம் என புவியியல்துறையைச் சார்ந்தவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் கடந்த கால யுத்தத்தால் பெருமளவிலான காடுகள் அழிக்கப்பட்டு விட்ட நிலையில் மண்ணரிப்பு காரணமாக தரைதோற்ற அமைப்புகளில் ஏற்பட்ட மாற்றங்களே இம்முறை வெள்ள அனர்த்தத்தினால் இழப்புகள் அதிகரிக்கக் காரணம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை பேராசிரியர் எஸ்.அண்டனி நோபட் தெரிவித்தார்.

வடக்கு -கிழக்குப் பகுதிகளில் வடிகால் கட்டமைப்புகளை சீரமைக்கும் போது ஆறுகள் மற்றும் குளங்களுடன் தொடர்புபடுத்தி கால்வாய்களை அமைக்க வேண்டும் எனவும் இந்த நடவடிக்கை அவசியமானதும் அவசரமானதுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆறு, குளங்கள் ஆழமாகக்கப்பட்டு கால்வாய்கள் கடலுடன் தொடர்புபடுத்தப்படுவதன் மூலம் பிரதேசத்தில் விவசாயத்தை ஊக்குவிக்கவும் மாரிகாலங்களில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படாதவாறு மழை நீரை இலகுவாக கடலுக்கு அனுப்ப முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இம்முறை வடக்கு -கிழக்குப்பகுதியில் பெரும் சேதங்களை ஏற்படுத்திய வெள்ளப்பெருக்குக் வடி காலமைப்புக்குள் அடங்காத அளவுக்கு இடைவிடாது தொடர்ந்து பெய்த அடைமழையே முக்கிய காரணம் என வும் ஆனால் வடிகால் கட்டமைப்புகள் நவீன மயப்படுத்தப்படும் பட்சத்தில் சேதங்களின் அளவைக் குறைக்க முடியும் எனவும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மரண அறிவித்தல்கள்

## அன்ரன் லோகர்சன்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் டுபாயை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரன் லோகர்சன் - மகேந்திரன் 09.02. 2011 (புதன்கிழமை) அன்று அகால மரணமானார்.

அன்னார் பற்றிமா ராணி, சின்னத்தம்பி மகேந்திரன் (மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை மற்றும் யாழ். போதனா வைத்திய சாலை பணியாளரும், தற்போது எம்.எஸ்.எவ்.வைத்தியசாலை பம்பைமடு பணியாளரும்) ஆகியோரின் இளைய மகனும், அருட்திரு. யூட் சுதர்சன் (மருகுரு, அளவெட்டி சி.ஏ. சி.எம் ஆலயம்), திருமதி சுசிபமிலா அரியரத்தினம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியரும், தற்பொழுது வெஸ்லி கல்லூரி பொரளை ஆசிரியரும்), காலஞ்சென்ற செல்வி சோபியா ஜொய்சியின் அன்புச் சகோதரனும், ஜெப்றி ஜெயகாந், அரியரத்தினம் (ஒறியன்ட் எக்ஸ்பிரஸ் ஹொட்டல், கொள்ளுப்பிட்டி), ஜெபஜோதி கிறிஸ்ரினா சுதர்சன் (ஆசிரியை, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், இவாஞ்சலின் தானியாவின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கல்கிஸை, காலி வீதியிலுள்ள மகிந்த மலர்ச்சாலையில் 15.02.2011 (செவ்வாய்க்கிழமை) அன்று காலை 8.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 5.30 மணிக்கு இறுதி வழிபாடு நடைபெறும்.

பின்னர் 16.02.2011 (புதின்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 201-1, ஓ.எல்.ஆர் அவெனியு, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 3.30 மணிக்கு நல்லடக்க வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரது உடலம் நல்லூர், புனித யாக்கோபு தேவாலய சேமக்காலைக்கு எடுத்துச்செல் லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்: -
திரு.திருமதி சின்னத்தம்பி மகேந்திரன்
T.P.: 0777 286010, 0773 559944

(ஸ்ரீ-1092)

## திருமதி புஸ்பவதி ஆனந்தராசா



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனந்தா வீதி, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி ஆனந்தராசா அவர்கள் 12.02.2011 (சனிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேசு சின்னராசா, திருமதி சின்னராசா திலகவதியின் அன்பு மகளும், வல்லிபுரம் ஆனந்தராசாவின் பாசமிகு மனைவியும், நிமலா, மயூரன் (நோர்வே), தர்சிகா (மட்டக்களப்பு, பல்கலைக் கழகம்-2ஆம் ஆண்டு), கிரிசாந்த் (கனடா), நிருஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பகரன் (ஜேர்மனி), இராசவதி (கனடா), சித்திரா (நோர்வே), சுமதி (கனடா), மாலதி (லண்டன்), லகிதா (ஆசிரியர், யா/கலாநிதி தியாகராசா மகாவித்தியாலயம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சசீகரன் (அபிவிருத்தி உதவியாளர், பிரதேச செயலகம், சங்கானை) வாசுகி (யாழ். பல்கலைக்கழகம்-2ஆம் வருடம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திசானாவின் பாசமிகு பேர்த்தியும் திருநாவுக்கரசு (முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்), ஜெயராசா (கனடா), குணசிங்கம் (டென்மார்க்) காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 16.02.2011 (புதன்கிழமை) முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பி[illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தாவீதி,
மானிப்பாய்.

தகவல்: கணவன்,
பிள்ளைகள், மருமக்கள்
T.P.: 021 4921897, 077 52 42 495

(3812)

## திருமதி சிவபாதம் சகுந்தலாதேவி



இன்னாவத்தை கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிசகுந்தலாதேவி 12.02.2011 சனிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத் தம்பி மற்றும் பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான ஆயுள்வேத வைத்தியர் இராசையா-அன்னபூரணம் (மறவன் புலோ) தம்பதியரின் அன்பு மருமகளும், சிவபாதத்தின் (ஊழியர் யா/கொக்குவில் இ.க.) அன்புமனைவியும், திலக்ஷன் (ஸ்கந்த வரோதய கல்லூரி), அகீபன் (யா/பண்ணாகம் மெய்கண்டான், மகாவித்தி)ஆகியோரின் அன்புத் தாயாரும் அமிர்தலிங்கம் (சங்கானை),சுந்தரலிங்கம் (கனடா),சந்திரலிங்கம் (பிரதேசசபை, காங்கேசன்துறை), காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (14.02.2011) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நவாலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடக்கம்பரை, தொல்புரம், சுழிபுரம்.
(அருள் கராஜ் அருகில்)
077 8570730

தகவல்:
குடும்பத்தினர்.

(ஸ்ரீ/1091)

# யாழ் மாவட்டத்தில் போரின் பின்னரான, பெண்களின் பொருளாதார சமூக மீளுருவாக்கப் பயணம்

சிந்தனைக் கூடம்-யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் "யாழ்ப்பாண மாவட்ட வளங்கள், பயன்பாடு, அபிவிருத்தி வழிமுறைகள்" எனும் தலைப்பில் நடத்திய செயலமர்வில் வழங்கப்பட்ட ஆய்வுரை

இன்று எமது நாடு வரலாற்றிலேயே மிக இக்கட்டான நிலையிலே உள்ளது. வன்முறை மோதலில் இருந்து விடுபட்ட போதிலும் வன்முறைக் கலாசாரத்தை முற்றாக அழிக்கமுடியாத நிலை, உருவாக்கப்படும் திட்டங்கள் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்களாக அமையவில்லை.

பொருளியலாளர் அமத்தியா சென் அவர்களது கருத் துப்படி "அபிவிருத்திப் பணிகளில் ஜனநாயக விழுமியங்கள் இணைக் கப்படும்போது அவைமேலும் செழுமை பெற்று சமூகத்தின் அடிப்படை கலாசாரமாக மாற்றம் பெறுகின்றன" என்று கூறினார். வளங்களின் அதி உச்சப் பயன்பாடு அபிவிருத்தியின் அடிப்படைத் தேவையாகும். ஆனால் நாட்டின் முழுமையான வளங்களையும் அரசு தன் பூரண கட்டுப்பாட்டில் கொண்டு வரும் போக்கே இன்று காணப்படுகிறது அரசசார் பற்ற நிறுவனங்கள் கூட அரசின் கட்டுப் பாட்டில் இயங்க வேண்டிய நிலையுள்ளது. போரின் வெற்றி தேர்தல் வெற்றிக்கு காரணமாக அமைந்ததா? அல்லது நாட்டை உலுக்கும் பொருளா தார பிரச்சினைகட்கு தீர்வுகண்டுள்ளதா என்பது இன்றும் கேள்விக்குறியாகவே உள்ளது.

போரின் கோரப்பிடியிலிருந்து தம் சொந்த நிலங்களை விட்டு அகதிகளாக ஓட நிர்ப்பந்திக்கப்பட்ட மக்கள் திரும்பி வரவும் முடியவில்லை. வந்தாலும் தமது சொந்த நிலங்களில் கால் பதிக்கவும் முடியவில்லை. தம் சொந்தக் காணிகளை தம்முடையவை என உறுதிப்படுத்த எண்ணிலடங்கா கேள்விகள் தொடுக்கப்படுகின்றன. தகுதியான ஆவனங்கள் இன்றி அலையும் மக்கள் மத்தியில் குறிப்பாக கணவன்மாரை இழந்த பெண்கள் தமதுசொந்தக் காணிகளை தேடி மீளக்குடியேறுவது சிரமமான காரியமாக உள்ளது. இலங்கையின் வழப்பயன்பாடு, காணிவிடையங்கள், வரிவிதிப்புபோன்றன மாகாண சபைகளின் அதிகாரத்தில் நிர்வகிக்கப் பட்ட போதிலும் வடக்கு மாகாணத்தில் மாகாணசபை இதுவரை முறையாக இயங்காத நிலையில் மத்திய அரசாங்கத்தின் மேல்திக தலையீட்டை தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உடைமைகட்கு ஏற்பட்ட பேரழிவுகளோடு மக்கள் சந்திக்கும் வறுமைக்குமைகளோடே புனரமைப்பு மீள்கட்டுமானப் பணிகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாடு நிலைத்து நிற்க்கக்கூடிய அபிவிருத்திக்கு வழிவகைகளை ஏற்படுத்தியுள்ளதா? என்பதும் ஆராயப்பட வேண்டிய விடையமாக உள்ளது.

அபிவிருத்திப்பாதையில் பெண்கள் பங்களிப்பை நோக்கும் போது பொருளாதார சமூகத்துறைகளில் பெண்கள் முன்னரைவிட பாரிய முன்னேற்றம் அடைந்துள்ளனர் என்பதை யாரும் மறுக்க இயலாது. எமது நாட்டில் 90வீதமான பெண்கள் எழுத்தறிவுடையவராவர் என்று அரச அதிகாரத் துறை தனியார் துறை, மருத்துவம், சட்டம், ஆசிரியத் தொழில், கலைத் துறைபோன்ற பல துறைகள் உள்ளடங்கலாக பொதுநிர்வாகங்களில் பெண்கள் அதிகம் ஈடுபடுகின்றார்கள்.

மேலும் பால்நிலை பாரபட்சம் தொடர்பான சீர்திருத்தச்சட்டங்களிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதோடு பெண்களின் உரிமைகள் தொடர்பாகவும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. ஆயினும், அபிவிருத்தி என்ற பொதுவான பதத்தினுள் 'பெண்ணின் அபிவிருத்தி என்ற செயற்பாடு இடம் பெறுவதில்லை அதற்கு அப்பாலும் ஆற்றப் பட வேண்டிய பல தேவைகள் பெண்களுக்கு சிறப்பாக உள்ளன.

பெண்கள் அதிகார அரசியலில் புறக்கணிக்கப்படல், சமூக அடக்குமுறைக்கு உள்ளாதல், பெண்களுக்கு எதிரான வன்முறை, பெண்கள் தொடர்பான பாரம்பரிய மனப்பாங்கு இவை எமது சமூகத்தில் மாறுவதாக இல்லை.

பெண்களுக்கு தொழில்வாய்ப்பு பிரவேசம் அதிகரித்திருந்தும் தொழில் ரீதியான பால்பிரிவு மாறவில்லை. நாம் பெருமைப்படும் சமூக, பொருளாதார அபிவிருத்தியை எல்லாப் பெண்களும் அனுபவிப்பது இல்லை. பாரபட்சம் காட்டப்படும் நிலையில் பெண்கள் கல்வி, சுகாதாரம், பொருளாதாரச்சுரண்டல் தொடர்பான விடையங்களை அணுகுவதற்கு பலத்தசவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது. இனமோதலின் காரணமாக பெண்கள் ஆண்துணையை இழந்ததோடு 80 வீதமானவர்கள் இடம்பெயரவும் நேரிட்டது.

யாழ் மாவட்டத்தில் மட்டும் ஆண் துணையை இழந்த ஏறத்தாழ 29 ஆயிரம் பெண்கள் இளம்வயதினர் உட்பட தாமே தனித்துக்குடும்பச்சுமையை தாங்கவேண்டியவர்களாகவும், சமூகத்தின் பாதுகாப்பை வேண்டி நிற்பவர்களாகவும் உள்ளனர். இவர்களைத் தவிர கணவர் காணாமற் போனவர்கள் கூட தனியாக குடும்பச் சுமையை சுமந்து வாழ்கின்றனர். இவர்கள் யாவரையும் சமூகமே பாதுகாக்க வேண்டும்.

மேற்கூறப்பட்டவை தவிர வேலை எதிர்பார்த்திருப்போரில் ஆண்களை விடபெண்களே அதிகம். பெண்ணின் அபிவிருத்தி என்பது ஓர் சமனற்ற நிலையையே காட்டுகின்றது. ஐ.நா பாதுகாப்புச்சபை பிரகடன இலக்கம் 1325இன் அடிப்படையில், ஓர் நிலையில் இருந்து இன்னோர் நிலைக்கு கடந்து செல்லும் காலகட்டத்தில் சமாதானத்தைக்கட்டியெழுப்புதல், மீள்கட்டமைப்பு, மீள்குடியேற்றம், பாதுகாப்பு ஆகியவற்றிற்கு பால் நிலை சார் அணுகுமுறை அவசியமானது.

ஆனால், இங்கு தற்போதுள்ள சூழ் நிலைகள் நடைமுறைச்செயற்பாடுகள் யாவும் பெண்கள் அபிவிருத்திப்பணிகளில் பங்குபற்ற வாய்ப்பளிப்பனவாக தெரியவில்லை. பெண்கள், மீள்கட்டுமானப்பணிகளில் தெரிவுக் குழுக்களின் தீர்மானம் எடுப்பவர்களாக உள்ளெடுக்கப்படல் அவசியம். பெண்கள் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுதலுக்குரிய சாதகமான சூழ்நிலை உருவாக்கப் படல் வேண்டும்.

பொருளாதார வளங்கள் தொடர்பாக பெண்களுக்கு உள்ள உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு அவர்களது இயலுமை உறுதி செய்யப்படும் போது வளப்பகிர்வு பெண்களுக்கும் ஏற்புடைத்தாகின்றது. இடம் பெயர்ந்த பெண்களுக்கு சொந்தமாக நிலத்துண்டுகள் பிரித்து வழங்கப்படும் போது விவசாய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் சீவனோபாய செயற்பாடுகட்கும் அவர்கள் உரித்துடையோராகின்றனர்.

பெண்கள் சுயமாக தொழில் பார்க்க நிதி வழங்கும் நிறுவனங்கள் ஆதரவு வழங்க வேண்டும். பெண்கள் கடன் வசதிகளை பெற்றுக் கொள்வதில் பல இடர்ப்பாடுகளை எதிர்நோக்குகின்றனர். யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் பெருகிவரும் வங்கிகள், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு கடன் வசதிகளை இலகுவாக்குபவையாக காணப்படவில்லை. கிராமியப் பெண்களுக்கு உற்பத்திக் கடன் வழங்கும் (production credit to Rural women) நடைமுறை விருத்தியாக்கப் படவில்லை.

பெண்கள் நிர்வகிக்கும் கிராமிய வங்கிகளை உருவாக்குவதன் மூலம் இக்கடன் வழிமுறைகளை இலகுவாக்க முடியும். மேலும் பெண்கள் தம்மை ஒழுங்கமைப்புக்குள் உட்படுத்தி தம் உரிமைகளை காப்பதற்கான நிறுவனங்களை உருவாக்குதல் இன்றியமையாதது. இவை இன்னும் எட்டப்படவில்லை.

வேலை வாய்ப்பு என்பது ஆண்களுக்கு மட்டும் தானா? பெண்கள் எல்லோரும் ஏதாவது தொழில் செய்ய வேண்டும் என்று விரும்ப வில்லையா? என்ற வினாக்களை தொடுப்பின் பெண்களுக்கு தொழில் கட்டாய தேவையாக அமைவதோடு அது அவர்களுக்கு சமூக அந்தஸ்தையும் கொடுக்கும் என்ற விடை கிடைக்கும். பெண்களுக்கு தொழில் கட்டாய தேவை என்பது சமூக மயப்படுத்தப் படவில்லை. பெண் விரும்பினால் தொழில் பார்க்கலாம். தொழில் பார்க்கும் பெண்கள் கூட இடையில் அவற்றை நிறுத்தி விடுவதும் உண்டு. பெண்கள் சார்நிலைப் பொருளாதாரத்தையே கொண்டுள்ளனர். இவர்கள் சமூக உருவாக்கத்தில் துணைபுரிபவர்களாக மாற்றப்படல் வேண்டும். வேலை தேடும் பெண்கள் எவ்வகையான தொழிலைத் தேடுகின்றனர் என அறிந்து தொழில் சார் கற்கை நெறிகளை வழங்கி பெண்கள் தொழிலைத் தேடிக் கொள்ள வழி காண வேண்டும். இவ்வாறான தொழில் பயிற்சிகளில் பெண்கள் கூடுதலாக உள்வாங்கப் படுவது தேவையாக உள்ளது.

சுயதொழில்கள் கூட தற்காலத்திற்கேற்ப நவீன மயப்படுத்தப்பட்ட தொழில்களாக மாற்றப்படும் போது பெண்களின் ஈடுபாடு இவற்றில் அதிகரிக்க வாய்ப்புண்டு. இத் தேவை களுக்காக போதிய மனிதவளம், நிதி என்பன ஒதுக்கப் படல் வேண்டும்.

வலுவூட்டல் (empowerment) செயற்பாடானது அபிவிருத்திக்கு மிக அவசியமானது. வலுவூட்டலை யாரும் எவருக்கும் கொடுக்க முடியாது. தொடர்ச்சியான கல்வி வழிகாட்டல், அதன் மூலம் பெறப்படும் அறிவை மூலாதாரமாக கொண்டதே வலுவூட்டல் ஆகும். பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் தொடர்ந்து இச்செயற்பாட்டை ஆற்றி வந்த போதிலும் அவற்றின் பயன்பாடு செயற்றிறன் மிக்கதாக அமைய வில்லை. இன்றைய நிலையில் குறிப்பாக நாம் மையப்படுத்த வேண்டிய அம்சங்களில் முன்னாள் பெண் போராளிகளின் மீள் சமுதாய இணைப்பு முக்கியம் பெறுகின்றது. அபிவிருத்திப் பணிகளில் இவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களது வாழ்வாதாரங்கள், சமூக தரம் என்பன மேம்படுத்தப்பட வேண்டும்.


துறைசார் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் விவசாயம், மீன்பிடி, உட்கட்டுமான பணிகள், சிறுகைத்தொழில், கணனிச் சேவை போன்ற துறைகளில் பெண்களை உள்ளடக்கப்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு. அதே போல் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்கி அவர்களை மேல் நிலைக்கு இட்டுச்செல்வதோடு தொழில் வாய்ப்புகளையும் வழங்குதல் வேண்டும். இவ்வாறு ஆளுமை உள்ளவர்களாக பெண்கள் மேலோங்கும் போது அவர்கள் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதோடு தீர்மானம் எடுக்கும் வலுவுள்ளவர்களாகவும் மாற்ற முறுவார்கள்.

இதனால் பெண்கள் எதிர் கொள்ளும் பல இடர்பாடுகளை அவர்கள் தாங்களாகவே நீக்கக்கூடிய வாய்ப்புக்கள் பெருக இடமுண்டு அரசியல் தளங்களில் கூட பலபெண்கள் ஈடுபடும் போது, பெண்களுக்காக பாராளுமன்றத்திலும் உள்ளூராட்சி அமைப்புக்களிலும் தமது உரிமைக்காக குரல் கொடுக்க முடிகிறது. இவ்வாறான அபிவிருத்திப் பணிகளில் பெண்கள் ஈடுபடும் போது ஆண்களிற்கு சரிநிகர் சமமாக பெண்கள் எழுச்சி பெற்று எமது பொருளாதார சமூக கலாசார மேம்பாட்டை விரைவில் மேலோங்க செய்யமுடியும்.

சரோஜா சிவசந்திரன் எம்.ஏ
பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.
தேசிய மகளிர் குழு அங்கத்தவர், மகளிர் விவகார அமைச்சு.







யாழ்.நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்பையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மலையக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ஆ.சுந்தரலிங்கம் வெற்றியீட்டிய மாணவி ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:- கர வெட்டிச் செய்தியாளர்)

# பொருளாதார அபிவிருத்தி என்ற போர்வையில் சர்வாதிகார ஆட்சியை ஏற்க முடியாது

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுபீட்சம் என்றபோர்வையில் முன்னெடுக்கப் படும் சர்வாதிகார ஆட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய பாராளுமன்ற பேரவையின் 3 ஆம் அமர்வுகளில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மோசமான ஆட்சி மற்றும் ஊழல் மோசடிகளினால் மக்களுக்கும் நாட்டுக்கும் எதுவித நன்மையும் கிடைக்காது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஊழல் மோசடிகளை மேற்கொள்ளும் தலை வர்களுக்கு எதிராக உலக மக்கள் அணி திரண்டு வருவதனை தற்போது அவதானிக்க முடிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகளை மூடி மறைப்பது ஜனநாயகமாகாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதார அபிவிருத்தியை காரணம் காட்டி நாட்டில் அரசியல் சாசன ரீதியான சர்வாதிகாரத்தை மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே பொருளாதார அபிவிருத்தி அர்த்தமுள்ளதாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை இரண்டாம் குறுக்குத்தெரு பாசையூரிலும், காலை 11.30 தொடக்கம் பி.ப.1.30 மணிவரை 3ஆம் குறுக்குத்தெரு,பாசையூரிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இந்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்.ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இளைஞர் பாராளுமன்றக் கட்டடம் அநுராதபுரத்தில் விரைவில் நிர்மாணம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் பாராளுமன்ற கட்டடத் தொகுதி அநுராதபுரத்தில் அமைக்கப்படவுள்ளதாக இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் தேசிய இளைஞர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

மஹரகமவில் அமைந்துள்ள இளைஞர் சேவை மன்றத்தில் உருவாக்கப்பட்டுள்ள இளைஞர் பாராளுமன்றப் பிரிவுக்குள் இந்த வைபவம் நடைபெறும்.

இதேவேளை, இளைஞர் பாராளுமன்றக் கட்டடத்தொகுதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அநுராதபுரத்தில் விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இதற்காக மிகிந்தலைப் பகுதியில் 68 ஏக்கர் கொண்ட காணி தெரிவு செய்யப் பட்டுள்ளது.அங்கு நிர்மாணிக்கப்படவுள்ள இளைஞர் கிராமத்திலேயே இளைஞர் பாராளுமன்றம் அமைக்கப்படும்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி நடத்தப்பட்ட இளைஞர் பாராளுமன்றத் தேர்தலில் நாட்டின் 331 பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து 331 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ. அருணந்திசிவம் தலைமையில் நடைறெும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசர் வ. செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. க.பஞ்சலிங்கம் சிறப்பு விருந்தினராக இலங்கை போக்குவரத்து சபையின் ஓய்வுபெற்ற கணக்காளர் நா. சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி வே. பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்தயாளன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி றோகினி தயாளன் வழங்கிக் கௌரவிப்பார்.

(ஸ்ரீ-2)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.இராஜசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தியமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் திறந்த பல்கலைக்கழக உதவிப் பதிவாளருமான ஜே.பிரபாகரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-9)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ வட்டு கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல்2 மணிக்கு சுப்பர்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் ந.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேசசபை செயலாளர் சு.புத்தி சிகாமணி, சிறப்பு விருந்தினர்களாக ஈ.பி. டி.பி. யின் வலி.மேற்கு பிரதேச அமைப்பாளர் வே. மகேந்திரன்,லங்கா உலக தரிசனம் திட்ட அலுவலர் ஜெ.சரோன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் செ.இராமநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு**

__வெளிவாரிப் பரீட்சைகள்-2009__

பொது மற்றும் சிறப்புக்கலைமாணித் தேர்வு பகுதி- I - 2008 & 2009

(வெளிவாரி)

மேற்படி பரீட்சையை 26.03.2011 (சனிக்கிழமை) தொடக்கம் 09.04.2011 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 22.03.2011 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
14.02.2011

(சி-2449)

# கள்ளிக்காட்டு இதிகாசம்

**40**



**கவிப்பேரரசு வைரமுத்து**

வேற வழியே தெரியல. பேயத்தேவரு வண்டிநாயக்கர் கிட்ட ஊரடித்தோட்டத்த ஒத்திவச்சாரு. அவரு வேணாம் வேணாம்னாலும் பத்திரத்த எடுத்து அவரு வீட்டு ஊஞ்சல்ல ஒரு ஓரமா வச்சிட்டுக் கும்புட்டுத் திரும்பிப் பாக்காம வந்திட்டாரு.

"கடவுளே! எனக்குச் சத்தில்ல சாமி! தாங்கமாட்டேன். இதுக்கு மேல சோதிச்சா இந்த அவத்தப்பய அழிஞ்சு போவான். ஒன் அழிச்சாட்டியத்த நிறுத்திக்க சாமி!"

கம்புக்கூடு தெரியக் கைரெண்டையும் தலைக்கு மேல தூக்கி ஆகாசம் பாத்து ஒரு கும்புடும் போட்டுப் பாத்தாரு பேயத்தேவர். கடவுளுக்குக் காதுகேக்காம இருந்திருக்கலாம்; இல்லாட்டி இங்க பகல் அங்க ராத்திரியா இருந்திருக்கலாம். ஒண்ணும் நடக்கல.

வாழாவெட்டியா அந்த வீட்டுல என்னைக்கு மின்னலு வந்தாளோ அன்னைக்கிருந்தே முருகாயிக்கு ஏழரைநாட்டுச் சனி ஆரம்பிச்சிருச்சு. தானுண்டு தன் வேலையுண்டுன்னு பேயத்தேவருக்குத் தொண்டூழியம் பண்ணிக்கிட்டுருந்த அப்பிராணிக் கெழவிய எடுத்ததுக்கெல்லாம் நொட்டச் சொல்லுச் சொல்ல ஆரம்பிச்சா மின்னலு. எந்த எடத்துல இருக்கிறமோ அந்த எடத்துல மொத ஆளா இருக்கணும்ன்னு நெனைக்கிறது ஆணுக்கோ பொண்ணுக்கோ உண்டான குணந்தானே. ஆத்தா பொழங்குன எடத்துல முருகாயி பொழங்கிறத நெனச்சா நெஞ்சுக்குள்ள சுருக்குன்னுச்சு மின்னலுக்கு.

ஆக்குப்பாரைக்குள்ள (சமையலறை) அவளாப் போறதும் உப்பு புளி மொளகாய அவ வச்ச சட்டத்துக்கு எடுத்தாள்றதும் நொய் நொய்ன்னு அழுகிற பிள்ளைக்குப் பால்கேட்டா "பொறு ஆத்தா! ரசத்தை எறக்கிட்டுப் பால் சுட வைக்கிறேன்"னு வாய்தாப் போடுகிறதும் கொஞ்சங்கூடப் புடிக்கல வாழா வெட்டியா வந்தவளுக்கு.

தஞ்சம்ன்னு சொல்லிப் பஞ்சம் பொழைக்க வந்த சிறுக்கி ஆளில்லாத வீட்ல அரசாளப் பாக்குறாளேங்கிற கடுப்பு திகுதிகுன்னு தீயா எரிஞ்சுச்சு அவ வகுத்துக்குள்ள. பத்தும் பத்தாதுக்குத் தங்கச்சியத் துக்கம் கேக்கவும் குறுணி பதக்குன்னு வீட்ல உண்டானத மூட்டைகட்டவும் அப்பப்ப வந்துபோனா அக்காகாரி.

"யக்கா! இவ என்ன நம்மள ஒக்காரவச்சுக் கஞ்சிகாச்சி ஊத்தறவமாதிரி இந்தக் குலுக்குக் குலுக்குறா"

"இவ என்ன உள்ளங்கையிலயா ஒல வைக்கிறா? நம்மளுக்குந் தெரியாதா இந்தக் கம்பங்களி கிண்டுற கம்பசூத்தரம்?"

"என்னமோ பேயத்தேவருக்கு ரெண்டாந்தாரமா வாக்கப்பட்டு வந்தவ மாதிரியில்ல பஞ்சம், பொழைக்க வந்தவ பகுமானம் பண்றா!"

"அந்தக் கெழவனக்கும் கருவாப்பய மொக்கராசுக்கும் நீ ஒருத்தியா நின்னு ஒத்தக்கையில கஞ்சிகாச்சி ஊத்தமாட்டியா?"

"காலம்போன கடைசியில இவ வேற எதுக்கு? கஞ்சிக்குப் புடிச்ச கேடா?"

"ஆத்தா செத்ததும் பொம்பள பொசு பொசுன்னு ஆயிட்டாள்ல"

"ஆமா! ஆளில்லாத வீட்ல அவளா அள்ளித் திங்கறாள்ல."

"நேத்துப் பாத்ததுக்கு இன்னைக்கு நெறமா இருக்காள்ல?"

"கன்னத்துலயும் கழுத்துலயும் ஒரு புதுச்சதை போட்ருக்குபாரு. என்னமோ போன சனிக்கிழமை தான் சடங்கான கொமரி மாதிரி."

அக்கா தங்கச்சிக ரெண்டுபேரு வாயிலயிருந்தும் வேற பேச்சே வாரதில்ல. பாவம்! வினயமில்லாம வெள்ளிந்தியா இருக்கிற கெழவி தாங்குவாளா?

அக்காளுந் தங்கச்சியுமாச்சேர்ந்து தன்ன வெலாவுல குத்தி வேடிக்க பாக்குறாளுகன்னு மட்டும் தெரியுது; ஆனா வெளியேத்தவே பாக்குறாளுகன்னு தெரியல.

நாளொரு இன்னலும் பொழுதொரு துன்பமுமா அவளுக்குக் கொடுக்க ஆரம்பிச்சாளுக. மத்தியானக் கஞ்சியும் குடிக்காம பொழுதுக்கும் உழுதுட்டு வந்து மேலுகாலுக்குத் தண்ணி ஊத்தித் துண்டுல தொடச்சும் தொடைக்காமப் பசியோட வந்து சம்மணங்கால் பொட்டு உக்காந்து "குடலக் கிள்ளுது கொண்டாங்கடி ஆத்தா"ன்னு பேயத்தேவர் ஒக்கார முருகாயி கொண்டாந்து களித்தட்ட வச்சா. களிய மேலாகப் பிச்சு வெந்தயக் குழம்புல ஒரு முக்குமுக்கி ஆசையா வாயில போட்டவருதான். மூஞ்சி சுருங்கி, கண்ணு இடுங்கி, கர்ரு புர்ருன்னு வாய்க்குள்ளேயே காறித்துத்... தூ...ன்னு துப்புனதுல வாசல்ல போயிக் கரேர்ன்னு விழுந்துச்சு களித்துண்டு.

"என்னம்மா இது? களியக் கிண்டி உப்பப் போட்டிகளா? உப்பக் கிண்டிக் களியப் போட்டிகளா?"

இதுக்குத்தான காத்திருந்தாளுக பொம்பளைக ரெண்டுபேரும்; புகுந்துட்டாளுக.

"யப்பே! கெழவிக்கு வரவரக் கண்ணு தெரியல. உப்பப் போடுன்னா சீனியப் போடுறா. சீனியப் போடுன்னா உப்பப் போடுறா. உப்பு ஒறப்பு ஒழுங்காப் பாத்து நல்ல கஞ்சி ஊத்து அப்பனுக்கின்னா, நாக்குச் செத்த கெழவனுக்கு நல்ல கஞ்சி எதுக்குங்கிறா."

"ஆக்குப்பாரைக்குள்ள அவளாப் புகுந்து நாந்தான் களியக் கிண்டுவேன் நகந்துபோன்னு சொன்னவ மின்னலு. களிய அவ கிண்டிட்டுப் பழிய எம்மேல போடறாளே." கழுத்துவரைக்கும் வந்துச்சு வார்த்த. முருகாயி சொல்லல; அப்படியே உள்ள அமுக்கிக்கிட்டா.

பேயத்தேவரும் மொக்கராசும் அன்னைக்கு ஒண்ணும் சாப்பிடல. அவிச்ச தட்டாங்காயைத் தின்டுபிட்டுப் பச்சத்தண்ணி குடிச்சிட்டுப் படுத்துட்டாக.

கிழவியக் குத்துறதும் கொடையறதும் முன்ன விட்டுப் பின்னப் பேசறதும் அவ சொல்லாத சொல்லுக்கெல்லாம் இல்லாத அர்த்தம் சொல்றதும் அக்கா தங்கச்சிகளுக்குப் பொழப்பாப் போச்சு. அவளுகளாத் தப்புப் பண்ணிட்டு அதக் கெழவி தலையில் தூக்கிப் போட்டாளுக. அப்பிடித்தான் ஆகிப் போச்சு அன்னைக்கொரு கூத்து.

பேயத்தேவரு தலைக்கு வச்சுப் படுக்கிற அழகம்மா சீலய அன்னைக்குங்காணோம். அங்க தேடுறாக; இங்க தேடுறாக; குட்டிபோட்ட பூனை மாதிரி சுத்திச் சுத்தி வாராக; எங்கயும் காணோம்.

"வச்சத வச்ச இடத்துல வைக்கவிடுறாளா கெழவி"ன்னு அவளத்தான் திட்டிக் தீக்குறாளுகளே தவிரக் காணாமப்போன சீலயக் கண்டுபிடிச்சுக் குடுக்கக்காணோம். சலவைக்காரங்க யாரும் அழுக்கெடுக்கவும் வரல. நேத்து இருந்த சீல இன்னைக்கு எங்க போச்சு? பெருச்சாளி தூக்கிட்டுப் போயா பொந்துக்குள்ள பொதச்சு வச்சிருச்சு? எங்க தேடியும் காங்கல. வசவுவாங்கி வசவு வாங்கியே கொழவிக்கு வகுறு வீங்கிப் போச்சு. கடைசியில சீல எங்க இருக்குன்னு மின்னலு பிள்ளதான் காட்டிக் குடுத்திச்சு.

வீர்ன்னு கத்திப் பிள்ளை அலறவும் என்ன ஏதுன்னு ஓடிப்போயிப் பாத்தா, தொட்டிலுக்குள்ள அழுகுது புள்ள; தொட்டிலாக் கட்னது அழகம்மா சீல.

இத எவ கட்னதுன்னு பேயத்தேவர் சத்தம் போட, இன்னவார்த்தைன்னு இல்லாமக் கெழவிய ஏடாகூடமாப் பேசிக் கிண்டிக் கெழங்கெடுத்துட்டா மின்னலு. தொட்டிலக் கட்டினவளும் மின்னலுதான்; தூங்கவச்சவளும் மின்னலுதான். கெழவி இத வெளிய சொல்லமுடியாதே! தகப்பனுக்கும் மகளுக்கும் கோள் மூட்டி- குடிகெடுக்கின்னு பேர் வந்திருமே! எல்லாத்தையும் உள்ளுக்குள்ளயே வைராக்கியமா வச்சுக்கிட்டு மனசுக்குள்ளயே அழுது தொலச்சா முருகாயி.

கூட்டுப் புழுவுக்குக் குறுக்குவலி வந்தா வைத்தியனையா வரச்சொல்ல முடியும்?

ஒறங்குற பிள்ளைய எழுப்ப வேணான்னு சொல்லிப்பிட்டு விடிய விடியத் தொட்டிலாட்டிக்கிட்டே தூங்கிப் போனாரு பேயத்தேவரு.

ஆறேழு வருசங்கழிச்சுப் புருசன் செயில்ல இருந்து வர்ற வரைக்கும் இங்கதான இருந்தாகணும், இவ வேற எதுக்குத் ஒத்த உறையில ரெட்டக் கத்தி? வெளியேத்தியே தீரணும்னு அடுத்தடுத்தும் திட்டம் போட்டாளுக அக்கா தங்கச்சிக. ஊமக்காயங்களத் தாங்கிக்கிட்டு ஊமையாவே இருந்தா முருகாயி.

மின்னலு பிள்ளைக்கு ஒரு நாள் காச்சல் வந்திருச்சு, கதகதன்னு எரியுது ஒடம்பு. நெத்தியில மஞ்சப்பத்துப் போட்டும் காச்சல் கொறையல.

தல குளுந்துருக்கணும்; பாதம் சூடாயிருக்கணும். அதான் நல்ல மனுச ஒடம்பு. ஆனா பிள்ளைக்குத் தலை கொதிச்சுக்கெடக்கு; பாதம் குளுந்துகெடக்கு.

(வளரும்)



# தமிழ்நாடு பிரிந்து விடக்கூடாது என்பதற்காகவே
# தமிழீழம் அமைவதை இந்தியா விரும்பவில்லை


சோனியா

2009ஆம் ஆண்டு மே மாதம் புலிகள் அமைப்பு போராட்டத்தில் தோல்வியைத் தழுவியபோது இந்திய அசாம் மாநில ஐக்கிய கிளர்ச்சி முன்னணியின் தலைவர் பாரேஷ் பாருவா, கட்டுரை ஒன்றை எழுதியிருந்தார். அது "புலிகளின் தலைவர் ஏன் தோற்றார்" என்ற தலைப்பில் அமைந்திருந்தது. அதாவது புலிகளின் தலைவர் தோற்றமைக்குக் காரணம் அவர் மறைவிடங்களைப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்தமையே என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அசாம் மாநிலத்தில் "பாரேஷ் பாருவா" என்றால் தெரியாதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். விடுதலைப் புலிகளுக்கு நிகரான ஒரு போராட்ட அமைப்பு என்று பலராலும் வர்ணிக்கப்படும் அசாம் ஐக்கிய கிளர்ச்சி முன்னணியின் தலைவர் இவர்.

இந்த அமைப்பு சுமார் 30 வருடங்களாக ஒடுக்கப்பட்ட அசாம் மக்களுக்காகப் போராடி வருகிறது. புலிகள் போல இந்த அமைப்பையும் இந்தியா தடைசெய்துள்ளது. இவ்வமைப்பு பாரிய ஆயுதப் போராட்டம் ஒன்றை கடந்த மூன்று தசாப்த காலமாக நடத்தி வருகிறது.

உலகில் அமெரிக்காவால் தேடப்படும் பின்லேடன் இருப்பிடம் கூட அமெரிக்காவுக்குத் தெரியும். ஆனால், தன் இருப்பிடத்தை எவராலும் கண்டுபிடிக்க முடியாது என்றும் பாரேஷ் பாருவா தெருவித்திருந்தார். அது ஒருவகையில் உண்மையும் கூட. பாரேஷ் பாருவா போராட்ட இயக்கத்தின் தலைவராக இருக்கும் நிலையில் அவர் அவ்வியக்கத்தின் மூத்த தளபதிகள், மற்றும் அடிமட்ட (ஆரம்பப்) போராளிகளிடம் இருந்து தன்னைப் பிரித்து பிறிதொரு இடத்திலேயே வாழ்ந்து வந்தார் என்பதே உண்மையாகும்.

அதனால் அவர் எங்கு இருக்கிறார் அல்லது எத் திசையில் இருக்கிறார் என்பதைக் கூட அறிய இந்திய அரசால் முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அரசானது ஒரு புலனாய்வு அதிகாரியை அவர் இயக்கத்தில் சேர்த்து வேவுபார்க்க விட்டது. அவரும் நீண்ட நாள் இயக்கத்தில் இருந்து இறுதியில் காட்டுப் பகுதிக்குச் சென்றார். அங்கே இன்னும் சில தினங்களில் பாரேஷ் பாருவா இருக்கும் இடத்தை அவர் கண்டுபிடிப்பார் என முழுமையாக இந்தியா நம்பியது. ஆனால், கிடைத்ததோ ஏமாற்றம் தான். ஏனெனில் அவர் போராளிகளோடு இல்லை.

இதனை பாரேஷ் பாருவா ஒரு பெரிய சாதனையாகக் கூறி சுயசரிதை போல கட்டுரை எழுதியிருந்தார். ஆனால் பாரேஷ் பாருவா ஒரு ஒளிந்திருக்கும் போராளி பேசுவதற்குச் சமானமானதாகவே கருத முடியும். ஏனெனில் போராளிகளையும் மூத்த தளபதிகளையும், நம்பாது பிரிந்து வேறு ஒரு இடத்தில் இருந்து உத்தரவுகளை வழங்கி, தனது இருப்பை உறுதி செய்வது என்பது ஒரு தலைவனுக்கு அழகு இல்லை. இந்நிலையில் பாரேஷ் பாருவா கூறிய கருத்துக்கள் ஒப்பிட முடியாதவையாக இருப்பதோடு, தலைவன் போராடாது வேறு ஆட்களைப் போராடச் சொல்வதே நல்லது என்றது போன்ற கருத்துப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு இவர் தெரிவித்த இக் கருத்துகளுக்கு தற்போது பலத்த அடி விழுந்துள்ளதே உண்மையாகும். அசாம் கிளர்ச்சி அமைப்பு தற்போது தோல்வியின் விளிம்பில் உள்ளது. இந்திய அரசோடு இவர்கள் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியாவில் அசாம் மாநிலத்துக்கு சுதந்திரம் வேண்டும் எனப் போராடிய இந்த அமைப்புடன், தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்புடன், பல இந்திய இராணுவத்தினரைக் கொன்ற அமைப்புடன், தற்போது சிதம்பரம் பேச்சுவார்த்தை நடத்துகிறார். ஆனால், விடுதலைப் புலிகளை இந்தியா ஒரு போதும் மன்னிக்கவில்லை. இதன் பின்னணி தான் என்ன? காங்கிரஸா?


பிரபாகரன்

இல்லை இந்தியாவா? அல்லது தமிழ் நாடுமேல் கொண்டுள்ள நம்பிக்கையின்மையா என்பதே கேள்விக்குறியாகும்.

தனி ஈழம் அமைந்தால், இந்தியாவில் உள்ள தமிழ்நாடு மாநிலம் பிரிந்து செல்ல நேரிடலாம், ரஷ்யா போல இந்தியாவும் உடைந்தால் அது தனது வல்லாதிக்கத்தையே இழக்கும் நிலை உருவாகும் என எண்ணியதா இந்தியா?

நன்றி: இணையம்

## வடக்கு புகையிரதப் பாதை நிர்மாண பணிகளில் இந்திய பொறியியலாளர்கள்

(கொழும்பு)

வடக்கு புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகளில் இந்திய பொறியியலாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 200க்கும் மேற்பட்ட பொறியியலாளர்கள் மற்றும் தொழில் நுட்பவியலாளர்கள் வடக்கு புகையிரதப்பாதை நிர்மாணப்பணிகளில் கடமையாற்றவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் புகையிரதப்பாதை நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இப்பணிகளில் ஈடுபடும் நோக்கில் ஏற்கனவே இந்தியர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு புகையிரதப்பாதைகளை அமைக்கும் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி உத்தியோகபூர்வமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக இலங்கை உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வடக்கு புகையிரதப்பாதை நிர்மாணப்பணிகள் மேற்கொள்ளப்படும் என இந்திய நிறுவனம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## சஜித் பிரேமதாசவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸவிற்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்காவினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை கருத்தில் கொண்டு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடத்தவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம் 22ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் தெரிவு தொடர்பான நடவடிக்கைகளின் போது சஜித் பிரேமதாஸ தம்மை தகாத வார்த்தைகளினால் திட்டியதாக ரவி கருணா நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர் தெரிவு தொடர்பான சர்ச்சையின் போது இந்த வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த முறைப்பாடு தொடர்பில் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் பின்னர் விசாரணை செய்யப்படும் என ஒழுக்காற்று விசாரணைக்குழு உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அண்மையில் ஊடகங்களில் வெளியிட்ட விமர்சனப்பாங்கான கருத்துக்கள் தொடர்பிலும் சஜித் பிரேமதாஸவிடம் விளக்கம் கோரப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)

## பாலித ஹோகனவுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பாலித ஹோகனவுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் போர்க்குற்றச்சாட்டு தொடர்பான வழக்கொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இன அழிப்புக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு மற்றும் சுவிஸ் ஈழத்தமிழர் பேரவை என்பன கூட்டிணைந்து அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்திருக்கும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலேயே கலாநிதி பாலித ஹோகனவுக்கு எதிரான வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டின் மே மாதம் 18 ஆம் திகதி வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களான ரமேஷ், புலித்தேவன் மற்றும் நடேசன் ஆகியோரின் படுகொலையில் பாலிதஹோகனவுக்கும் பங்கிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டே அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

அவருக்கு எதிரான முறைப்பாடுகளுடன் ஒளிப்பதிவு நாடாக்களும் ஆதாரமாகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

நாளை புதன்கிழமைக்கு முன்னதாக குறித்த வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் அறியக்கிடைத்துள்ளது. (ஸ்ரீ-2)

## இலங்கை வைத்திய நிபுணர்களுக்கு மலேசியாவில் வேலைவாய்ப்பு

இலங்கை வைத்திய நிபுணர்களுக்கு மலேசியாவில் பணியாற்ற வாய்ப்புக் கிட்டியுள்ளது.

மலேசிய வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாகவும் குறிப்பாக நகர்ப்புற வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எனவே எகிப்து, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து வைத்திய நிபுணர்களை பெற்றுக்கொள்ள மலேசியா தீர்மானித்துள்ளது. இதற்கான பேச்சுக்களை சம்பந்தப்பட்ட அரசுகளுடன் மலேசியாவின் சுகாதார அமைச்சு நடத்தி வருகிறது. (ஸ்ரீ-2)

# தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்படும் என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் மன்னார் விலாத்திக்குளம் மற்றும் கிளிநொச்சி பூநகரி, நாச்சிக்குடா ஆகிய பகுதிக்கு அமைச்சர் விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது அம் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளின் விடுதலை குறித்து அமைச்சரிடம் முறையிட்டனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், சிறையில் உள்ள தமிழ் கைதிகளது விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

இதன் பொருட்டு ,சட்டமா அதிபர் திணைக்களத்தில் 10 அதிகாரிகள் கொண்ட குழுவினர்,தமிழ்க்கைதிகள் தொடர்பான கோவைகளை ஆராய்ந்து வருவதாக இவ்விடயம் நீதியமைச்சிற்கு மாத்திரம் தொடர்புபட்ட ஒன்று அல்லவெனவும் இதில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் தொடர்பு இருக்கின்றமையையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இவர்களின் விரைவான விடுதலையின் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளும் தம்மால் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை,வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் பொருட்டு அமைச்சர் ரவூக் ஹக்கீம் ,மன்னார் அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு மன்னார் செயலகத்திற்கு கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாகாணசபை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்பின் படி ஏற்படுத்தப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என மாகாணசபை உறுப்பினர்களின் கூட்டிணைப்பு நேற்று முன்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அனைத்துக் கட்சிகளினதும் மாகாண சபை உறுப்பினர்களையும் கூட்டிணைப் பாகக் கொண்ட அமைப்பின் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் தம்புள்ளையில் இடம்பெற்ற போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர்கள் கடந்த 22 வருட காலமாக எந்தவித மான சலுகையினையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# நுவரெலியா மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் படி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 4 இலட்சத்து 67 ஆயிரத்து 103 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தத் தொகை கடந்த 2008 ஆம் ஆண்டு தேர்தல் பட்டியலோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் 9 ஆயிரத்து 966 பேர் வாக்காளர் எண்ணிக்கையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள மஸ்கெ லியா தொகுதியில் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 103 பேரும் கொத்மலைத் தொகுதியில் 71 ஆயிரத்து 585பேரும் ஹங்குராங்கெத்த தொ தியில் 67 ஆயிரத்து 76 பேரும் வலப்பனை தொகுதியில் 75 ஆயிரத்து 335 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

கடந்த 2008 ஆம் ஆண்டைவிட 2009 ஆம் ஆண்டில் நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் 6 ஆயிரத்து 034 பேரும் கொத்மலை தொகுதியில் 855 பேரும் ஹங்குராங்கெத்த தொகுதியில் ஆயிரத்து 107 பேரும் வலப்பனை தொகுதியில் ஆயிரத்து 970 பேரும் மொத்தம் 9 ஆயிரத்து 966 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாநகர சபைக்கு 10 உறுப்பினர்களும் ஹட்டன் டிக்கோயா நகர சபைக்கு 8 உறுப்பினர்களும் தலவாக்கொல -லிந்துலை நகர சபைக்கு 9 பேரும் அம்பகமுவ பிரதேச சபைக்கு 23 உறுப்பினர்களும் நுவரெலியா பிரதேச சபைக்கு 23 உறுப்பினர்களும் கொத்மலை பிரதேச சபைக்கு 22 உறுப்பினர்களும் வலப்பனை பிரதேச சபைக்கு 22 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் 13 கப்பல்கள்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச கடற்பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் 13 கப்பல்கள் தொடர்பான தகவல்கள் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

குறித்த 13 கப்பல்களும் வெளிநாடுகளில் பல்வேறு நாட்டவர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வு விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்தக் கப்பல்கள் இன்னும் தொடர்ச்சியாக சர்வதேச கடற்பரப்பில் பயணங்களை மேற்கொண்டிருப்பதுடன் அவற்றின் போக்குவரத்தின் மூலம் பெருந்தொகைப் பணத்தை விடுதலைப்புலிகள் அமைப்பு ஈட்டி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் அந்தக் கப்பல்களை கைப்பற்றி இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தாக்கிக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போதைக்கு சர்வதேச மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




★ 0590 - பாரசீகத்தின் வின் மன்னனாக இரண்டாம் கொஸ்ராவு முடி சூடினான்.

★ 1637 - புனித ரோம் பேரரசின் மன்னனாக மூன்றாம் பேர்டினண்ட் முடி சூடினான்.

★ 1898 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படைக் கப்பல் USS Maine கியூபாவில் அவானா துறைமுகத்தில் வெடித்து மூழ்கியதில் 260 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர். இந் நிகழ்வையடுத்து அமெரிக்கா ஸ்பெயின் மீது போரை அறிவித்தது.

★ 1920 - யாழ்ப்பாணத்தில் முதற்தடவையாக அரிசி பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ந்தது. கிட்டத்தட்ட 80ஆயிரம் இந்திய, ஐக்கிய இராச்சியம் மற்றும் அவுஸ்திரேலியாப் படையினர் போர்க் கைதிகளாகப் பிடிபட்டனர்.

★ 1946 - ENIAC என்ற முதல் தலைமுறைக் கணனி அறிமுகமானது.

★ 1950 - சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக் குடியரசு ஆகியன பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

★ 1961 - பெல்ஜியத்தில் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து அமெரிக்க Figure Skating வீரர்கள் உட்பட 73 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1970 - டொமினிக்கன் குடியரசு விமானம் ஒன்று சாண்டோ டொமிங்கோவில் கடலில் மூழ்கியதில் 102 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1989 - ஒன்பது ஆண்டு கால ஆக்கிரமிப்புக்குப் பின் ஆப்கானிஸ்தானிலிருந்து அனைத்து சோவியத் படைகளும் வெளியேறியதாக அறிவிக்கப்பட்டது.

★ 1994 - ரஷ்யா தார்த்தஸ்தானை ஒரு உட்குடியரசாக இணைத்துக் கொண்டது. தார்த்தஸ்தானின் விடுதலைக்கான போர் ஆரம்பமானது.

★ 1996 - சீனாவின் இண்டெல்சாட் செய்மதி ஒன்று ஏவியவுடனேயே கிராமம் ஒன்றில் வீழ்ந்ததில் பலர் கொல்லப்பட்டனர்.

★ 1999 - குர்டிஸ்தான் தீவிரவாதத் தலைவர் அப்துல்லா ஒக்கலன் துருக்கிய இரகசியப் படைகளினால் கென்யாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

★ 2005 - யூடியூப் சேவை ஐக்கிய அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.

### பிறப்புகள்

★ 1564 - கலிலியோ கலிலி, இத்தாலிய வானியலாளர், இயற்பியலாளர் (இ.1642)

★ 1845 - எலீஹூ ரூட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ.1937)

★ 1861 - ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலர் (இ. 1947)

★ 1861 - சார்ள்ஸ் கில்லோம், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர், (இ. 1938)

★ 1873 - ஹான்ஸ் இயூலர்-செல்ப்பின், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ.1964)

★ 1922 - டி.பி.விஜயதுங்கா, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி

★ 1949 - அனுரா பண்டாரநாயக்கா, இலங்கையின் அரசியல்வாதி (இ.2008)

★ 1956 - டெஸ்மண்ட் ஹெய்ன்ஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாளர்.

★ 1984 - மீரா ஜாஸ்மின், மலையாளத் திரைப்பட நடிகை


### இறப்புகள்

★ 1973 - அழகு சுப்பிரமணியம், ஆங்கில எழுத்தாளர், இலங்கையர் (பி. 1915)

★ 1988 - ரிச்சார்ட் பெயின்மான், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், (பி.1918)

★ 1999 - ஹென்றி கென்டால், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர். (பி.1926)

**கிமு 399 - மெய்யியலாளர் சோக்கிரட்டீஸ் மரணதண்டனைக்குள்ளாக் கப்பட்டார்.**



# எது சந்தோஷம்?

ஒருமுறை சங்கரன்பிள்ளைக்குக் கடவுளைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. 'உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன்' என்றார் கடவுள். 'எது வேண்டுமானாலும் கேட்கலாமா?' 'கேள். ஆனால், உனக்கு என்ன கிடைத்தாலும், உன் நண்பனுக்கு அதைப் போல் இரண்டு பங்கு கிடைக்கும்' என்றார் கடவுள்.

சங்கரன்பிள்ளை சந்தோசத்துடன் வீட்டுக்குப்போனார். 'கடவுளே, அரண்மனை போல ஒரு வீடு வேண்டும்'



அடுத்த கணம் சாயம்போய் இருந்த அவருடைய வீடு' அபாரமான அரண்மனையாகி விட்டது. ஜன்னல்வழியே பார்த்தார். அவருடைய நண்பன்வசித்த, இடத்தில் இரண்டு அரண்மனைகள் தோன்றியிருந்தன. சங்கரன்பிள்ளைக்கு சற்றே வலித்தது.

'போகட்டும். என்னோடு ஜாலியாக இருப்பதற்கு ஓர் உலக அழகிவேண்டும்' வேண்டிக் கொண்டதும், அவருடைய கட்டிலில் மிக ஒய்யாரமான பேரழகி தோன்றினாள்.

சங்கரன் பிள்ளையால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. ஜன்னல் வழியே நண்பர் வீட்டைப்பார்த்தார். அங்கே பலகணியில் அவனை இரண்டு பேரழகிகள் இருபுறமும் நிற்பதைக் கண்டார். அதற்கு மேல் சங்கரன்பிள்ளையால் பொறுக்க முடியவில்லை. மூன்றாவது வரத்தை அவசரமாகக் கேட்டார், 'கடவுளே, என்னுடைய ஒரு கண்ணைப் பிடுங்கிக்கொள்' தன்னிடம் இருப்பது அடுத்தவரிடம் இல்லாதிருந்தால் மட்டுமே சங்கரன் பிள்ளை போல் சந்தோஷப்படுபவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இருப்பதை யும் இழந்து விட்டுபரிதவித்துக்கொண்டிருப்பவர்கள்.

நீங்கள் ஒரு கார்வாங்குவீர்கள். சந்தோஷமாய் இருப்பீர்கள். ஆனால், பக்கத்து வீட்டுக்காரன் உங்களை விட விலை உயர்ந்த கார்வாங்கினால், உங்கள் சந்தோஷம் புஸ்ஸென்று போய் விடும். ஆயிரம் வருடங்களுக்கு முன் மனிதன் காரைப்பற்றியே அறிந்திருக்கவில்லை. ஆனால், அவனிடமிருந்த பசுமாட்டைவிட அடுத்த குடிலில் இருந்த பசுமாடு அதிக பால் கறந்து விட்டால், அவன் மனம் வெதும்பியிருப்பான்.

மாட்டுக்குப்பதிலாக இப்போது கார் வந்துவிட்டதே தவிர, அடிப்படையில் மனிதனின் துன்பம் மாறிவிட்டதா? இல்லையே!

கடந்த சில நூற்றாண்டுகளில் தன் சுகங்களுக்காக மனிதன், இந்தப் பூமியின் முகத்தையே மாற்றி விட்டான். மற்ற உயிர்களைப் பற்றிய பொறுப்புணர்வு இல்லாமல், புழு, பூச்சி, பறவை, மிருகம் எல்லாவற்றின் இடத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டான். மரம், செடி, கொடிகளைக் கூட விட்டு வைக்கவில்லை. நிலம், நீர், காற்று, எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு பயன்படுத்தி சுத்தமான சுவாசம் கிடைப்பதற்குக் கூடப் போராடும் நிலையை உருவாக்கி விட்டான்.

எல்லாம் எதற்காக? தனக்குச் சந்தோஷம் கிடைக்குமென்று நினைத்துத் தானே? ஆனந்தம் கிடைத்தது. அதைக் கொண்டாடும் மனநிறைவோடு அவன் பூமிப்பந்தையே சொக்கப் பனையாக எரிக்கட்டும். தப்பில்லை. ஆனால், சந்தோஷத்தை சிறிதளவும் ருசிக்கத் தெரியாமல், பூமியைமட்டும் அழித்துக் கொண்டிருக்க அவனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

எனக்கு ஒரு அத்தை இருந்தார். நவீனமானவர். லேடீஸ் கிளப்பில் முக்கிய உறுப்பினர். அபாரமாக உடுத்திக்கொண்டு போவார். விமலா என்ற உறுப்பினருக்கும் அவருக்கும் எப்போதும் பிரச்சினை. ஒரு குறிப்பிட்ட நாள் மீற்றிங்கில் இருந்து திரும்பியதும் அத்தை 'ஓ' வென்று அழ ஆரம்பித்தார். தலைவருக்கான தேர்தலில் தோற்று விட்டாரா? கார்விபத்துக்குள்ளாகிவிட்டதா? வேறு என்ன துக்கம்? புரியவேயில்லை.

"விமலாஎன்னை நன்றாகப் பழி வாங்கிவிட்டாள்" என்று ஒரு வழியாக அவர் அழுதபடி விபரித்தார். அத்தை புதிய நெக்லஸ் ஒன்றை அணிந்து கொண்டு மீற்றிங்குக்கு போயிருக்கிறார். மற்றவர் விசாரிக்கும்போது அந்த வைரங்களின் மேன்மையைப் பற்றி என்னவெல்லாம் சொல்ல வேண்டும் என்று தயார் செய்து வைத்திருந்தார். ஆனால், ஒரு உறுப்பினர் கூட நெக்லசைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. அத்தையால் அந்த ஏமாற்றத்தைத் தாங்க முடியவில்லை. விமலாவின் தூண்டுதலால் எல்லோரும் அப்படி அலட்சியம் செய்தார்கள் என்று அத்தை அவளை அழுது தூற்றினார்.

அத்தை விலையுயர்ந்த நெக்லஸ் வாங்கியது அவருடைய சந்தோசத்திற்காகத்தான். ஆனால், எங்கேயோ உட்கார்ந்து கொண்டு, மௌனத்தினாலேயே அந்த சந்தோசத்தை யாரோ ஒரு விமலாவால் பறிக்க முடிந்துவிட்டது.

எப்பேற்பட்ட அபத்தம் இது? உங்கள் வாழ்க்கையில்கூட இப்படி ஏதாவது நிகழலாம். உங்கள் ஆசையின் நோக்கம் என்ன? ஆனந்தமாயிருப்பது! ஆனால், எங்கே தவறு செய்கிறீர்கள்?



## ஆன்மீகம் 17

இவ்வளவு படித்தால் சந்தோசம். இவ்வளவு பணமிருந்தால் மகிழ்ச்சி. மற்றவர் பொறாமைப்படும்படி நகை அணிந்தால்தான் ஆனந்தம் என்று அதற்கு ஏதேதோ நிபந்தனைகள் விதித்தீர்கள்.

வெளிசூழ்நிலைகள் எல்லா சந்தர்ப்பங்களிலும் உங்கள் விருப்பப்படி அமையாது. ஆசையின் நோக்கம் புரியாமல், வெளிச்சூழ்நிலைகளை நூறுவிதமாக மாற்றிப் பார்த்தாலும் நிம்மதி கிடைக்காது. அப்படியானால், நெக்லஸிற்கு ஆசைப்பட்டது தப்பா? காருக்கு விருப்பப்பட்டது தவறா?

கிடையவே கிடையாது. எதன்மீது வேண்டுமானாலும் ஆசைவைக்கலாம். சந்தோசமாய் இருக்கவேண்டும் என்பதே உங்கள் ஆசையின் அடிப்படை என்பதை மறந்துவிடு. அதற்கான கருவிகளாக நீங்கள் தேர்ந்தெடுத்த நெக்லஸிலும், காரிலும் சிக்கிப்போனதால்தான் இந்த அவலம்.

உங்கள் சந்தோசத்தை மற்றவர் சொற்களுக்கும், வெளிசூழ்நிலைக்கும் அடமானம் வைக்காமல், பயணத்தைத் தொடருங்கள். இந்த உலகையே உங்கள் விருப்பப்படி மாற்ற முடியும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# திறந்த பல்கலைக்கழக யாழ் பிராந்தியத்தில் விஞ்ஞானமாணிப் பட்டப் படிப்பு

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் (OUSL) விஞ்ஞானப்பட்டமாணி (B.Sc. Degree) மற்றும் அத்திவாரக் கற்கைநெறிகளுக்கான (Foundation Course in Science) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களையும் நிகழ்ச்சித்திட்ட வழிகாட்டியையும் 2011 மாசி 8 ஆம் திகதியிலிருந்து பங்குனி 12 ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 - பி.ப. 5.00 வரையில் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகமானது பட்டமாணி, டிப்ளோமா, சான்றிதழ் ஆகிய நெறிகளோடு மேலும் பல்வேறு கற்கைநெறிகளை திறந்த கற்றலும் தொலைக்கல்வியும் என்ற முறைமையினூடு வழங்குவதில் முதன்மையான தேசிய பல்கலைக்கழகமாக விளங்குகின்றது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழும் 1990 இன் 1ஆம் இலக்க இலங்கைத் திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டத்தின் கீழும் 1980 இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஏனைய தேசிய பல்கலைக்கழகங்கள் போல் திறந்த பல்கலைக்கழகமும் சட்டம் மற்றும் கல்வி நிலையில் சம அந்தஸ்து உடையது என்பது சிறப்பம்சமாகும். இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமானது 18 வயதிற்கு மேற்பட்ட எந்தவொரு நபருக்கும் அவர்கள் தெரிவு செய்த கற்கை நெறி/பாடநெறிக்குப் பதிவு செய்வதற்கான ஒருசந்தர்ப்பத்தினை வழங்குகின்றது. அதனது கற்பித்தல் முறை, உட்கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக நாடு முழுவதிலும் ஒருபாரிய மாணவர்தொகையைக் கொண்டுள்ளது. அது 6 பிராந்திய நிலையங்களையும் 18 கற்கை நிலையங்களையும் உள்ளடக்கியதொரு வலையமைப்பைக்கொண்டுள்ளது. மத்திய வளாகமும், கொழும்பு பிராந்திய நிலையமும் (CRC) நாவலவில் அமைந்துள்ளன. மற்றைய 5 பிராந்திய நிலையங்களும் கண்டி (KRC), மாத்தறை (MRC), யாழ்ப்பாணம் (JRC), அநுராதபுரம் (ARC) மற்றும் மட்டக்களப்பு (BRC) ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் கற்பித்தல் முறையானது தொலைக்கல்வி முறைகளை அடிப்படையாகக் கொண்டதுடன், இது சம்பிரதாய கற்றல் தொகுதியிலிருந்து வேறுபட்டது. உங்களின் நாளாந்த வரவு எதிர்பார்க்கப் படுவதில்லையாதலால் தொழில்புரிவோருக்கும் வேறு கடப்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தியுள்ளவர்களுக்கும் மிகப்பொருத்தமானதாகும். மாணவர்களின் கற்றலானது சுய மற்றும் ஊக்கமான கற்றலுக்கேற்ற வகையில் கவனமாகத் தயாரிக்கப்பட்ட அச்சிடப்பட்ட கற்கைச்சாதனங்களின் மூலமாக இலகுவாக்கப்பட்டுள்ளது. அச்சிடப்பட்ட சாதனங்களுடன் கற்றலை விருத்தி செய்யக்கூடிய வகையில் கட்புலன் செவிப்புலன் சார் சாதனங்களும் வழங்கப்படுகின்றன. பாடநெறியில் உங்களது முன்னேற்றமானது மதிப்பீட்டுப் பரீட்சைகள், வீட்டு ஒப்படைகள் மற்றும் இறுதிப் பரீட்சைகள் போன்ற பல்வேறு மதிப்பீட்டு முறைகளினூடு வெவ்வேறு கால இடைவேளைகளில் மதிப்பிடப்படும்.

விஞ்ஞானப்பட்டமாணி (B.Sc.Degree) ஆனது இயற்கை விஞ்ஞானங்கள் பீடத்தினால் வழங்கப்படுகின்றது. இயற்கை விஞ்ஞானங்கள் பீடமானது ஆறுகற்கைத் துறைகளைக் கொண்டுள்ளது. அவை தாவரவியல், இரசாயனவியல், கணிதமும் கணனி விஞ்ஞானமும், பௌதீகவியல், விலங்கியல், மற்றும் சுகாதாரவிஞ்ஞானங்கள் என்பனவாகும்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளியின் அடிப்படையில் ஏனைய சம்பிரதாய பல்கலைக்கழகங்களிற்கான அனுமதியை இழந்த க.பொ.த. உயர் தரத்தில் கணிதம் மற்றும் உயிரியல் துறைகளில் கற்ற மாணவர்களும் ஒரு விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் (B.Sc. Degree) பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் இலங்கைத் திறந்த பல்கலைக் கழகமானது இப்பட்ட மாணி நிகழ்ச்சித் திட்டத்தினை அதனது யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்திலும் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் நடாத்திவருகின்றது. நீங்கள் கொண்டுள்ள தகைமைகளுக்கமைய B.Sc பட்டமாணிக்காக, தாவரவியல், இரசாயனவியல், விலங்கியல், பௌதீகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், அல்லது கணனி விஞ்ஞானத்தைத் தெரிவுசெய்யலாம்.

க.பொ.த. உயர் தரத்தில் மூன்று சித்தி உடையவர்கள் மூன்றே வருடங்களிலும் ஏனையவர்கள்/பெறுபேறுகள் போதாதவர்கள் விஞ்ஞான அத்திவாரக் கற்கைநெறியினைப் பின்பற்றுவதன் மூலமும் விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் (B.Sc.Degree) பெற்றுக்கொள்ளலாம். மற்றும் உங்களது முன்னைய தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு குறித்த சில கற்கைநெறிகளுக்கு விலக்களிப் பினையும் நீங்கள் கோரலாம். நீங்கள் OUSL இல் B.Sc பட்டமாணியைத் தொடரும் அரசாங்க ஆசிரியராயின் கற்கை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வருடத்திற்கு 20 நாட்கள் கற்கைவிடுமுறை எடுப்பதற்கு உரித்துடையவராவீர்.

B.Sc பட்டமாணிக்காக ஏன் OUSL இல் நுழைய வேண்டும்? ஒரு தேசிய பல்கலைக் கழகத்திலிருந்தான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் தெரிவுசெய்வதற்கான பரந்துபட்ட பாடப்பரப்புக்கள் பல்லூடகக் கற்றல் சாதனங்கள் தொழில்புரிந்தவாறே கற்கத்தக்க நெகிழ்வுத்தன்மை பரந்துபட்ட பிரதேச வலையமைப்பு தவணை முறைகளில் செலுத்தத்தக்க கட்டணங்கள்.

19.02.2011 (சனிக்கிழமை) மு.ப. 9.00 இலிருந்து மதியம் 12.00 மணி வரை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ள இலவச கருத்தரங்கில் (Open Day) கலந்து கொள்வதன் மூலமாக OUSL மற்றும் B.Sc நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவலைப் பெறுவதன் பொருட்டு பல்கலைக்கழகத்திற்கு விஜயஞ் செய்ய ஆர்வமுடையோருக்கும், மாணவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாக வுள்ளவசதிவாய்ப்புகளை காண்பதற்கும், இப்பட்டமாணி பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குமான சந்தர்ப்பத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

இணைப்பாளர்,
யாழ். பிராந்திய நிலையம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

## தேசிய வீடமைப்பு அதிகார சபையினால்

# கிளிநொச்சி அறிவியல்நகர் கிராமத்தில் 50 வீடுகள் நிர்மாணம்



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் 50 வீடுகள் அமைக்கப்பட்டுவீடமைப்புப்பணிகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளதுடன் 50 மலசலகூடங்களும் 6

(கிளிநொச்சி)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் கிளிநொச்சி அறிவியல்நகர்ப்பகுதியில் 50 வீடுகள் அமைக்கப்பட்டு வீடமைப்பு பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுக் குழாய்க் கிணறுகளும் அமைக்கப் படவுள்ளன.

ஏ-9 வீதியிலிருந்து இவ் வீட்டிற்குச் செல்லும் பிரதான வீதியும் வீட்டுத் திட்டத்தின் உள்ளக வீதிகளுமாக 5 கிலோமீற்றர் வரையான வீதிகள் Enreq நிறுவனத்தின் நிதியுதவியுடன் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் அமைக்கப்படவுள்ளது. இவ்வீதிப்புனரமைப்பிற்கென 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

நன்கு திட்டமிடப்பட்ட வகையில் அமைக்கப்படும் இவ் வீட்டுத்திட்டம் வட்டியில்லாத முழுமையான வீட்டுக் கடனாகக் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதேவேளை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அரச மற்றும் அரச கூட்டுத் தாபன உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் வீடமைப்புக் கடன் தொகை 5 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏனையோருக்கு 2 இலட்சம் ரூபாவரையில் வீடமைப்புக் கடன் வழங்கப்படவுள்ளது.

இவ் வீடமைப்பு கடனைப் பெறுவதற்கு இரண்டு அரச உத்தியோகத்தர்கள் பிணையாளராக ஒப்பம் இடம்வேண்டும் என்ற நடைமுறை தளர்த்தப்பட்டு ஒரு அரச உத்தியோகத்தரின் பிணை ஒப்பந்தத்துடன் கடனினைப் பெற்றுக் கொள்ளலாம்.

வீடமைப்புக் கடனினைப் பெறவிரும்பும் பயனாளிகள் விண்ணப்பப் படிவங்களினை 155 ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-30)

# கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரம் ஏக்கரளவில் நெற்செய்கை பாதிப்பு

## பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் குளங்களின் நீர் மட்டங்கள் பருவகால மழையினால் உயர்வடைந்ததைத் தொடர்ந்து அவற்றின் கதவுகள் திறந்து விடப்பட்டு பல குளங்கள் வான் பாய்வதால் 11 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நெற் செய்கை அழிவடைந்திருப்பதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ. செல்வராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் கதவுகள் திறந்து விடப்பட்டதாலும் ஏனைய குளங்கள் வான் பாய்வதாலும் பல ஏக்கரளவில் நெல், உப உணவுப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், பழப்பயிர்கள் என்பன அழிவடைந்துள்ளன.

கடந்த 5 ஆம் திகதி வரையான தரவுத்தகவல்களின்படி 11 ஆயிரம் ஏக்கரளவில் நெல் அழிவடைந்துள்ளது. உப உணவுப் பயிர்களான உழுந்து, பயறு, கௌப்பி, சோளம், நிலக்கடலை என்பன 1500 ஏக்கரளவிலும் மரக்கறிப் பயிர்கள் 160 ஏக்கரளவிலும் பழப்பயிர்கள் 30 ஏக்கரளவிலும் அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் காலபோக பயிர்ச் செய்கையாக 54 ஆயிரம் ஏக்கரளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் பருவகால மழை பெய்யுமானால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் அதிகமாகக் காணப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-30)

## உமையாள்புரம் தமிழ் வித்தியாலய புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் தமிழ் வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை 1991 ஆம் ஆண்டின் பின்னர் கற்றல் செயற்பாடு நிறுத்தப்பட்டு மூடப்பட்டிருந்ததுடன் 20 வருடங்களின் பின் மீள ஆரம்பிக்கப் பட்டுள்ளது. பாடசாலையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர் என். சத்தியசீலன், கல்வித் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-3-30)



கிளிநொச்சி தனியார் பேருந்து நிலையம் பருவமழையினால் சேறும் சகதியுமாகக் காணப்படுவதனை படத்தில் காணலாம்.
(படம்:- கிளிநொச்சி செய்தியாளர்)

## புதிய வாசிகசாலை நிர்மாணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பரிபாலன சபையால் வாசிகசாலையொன்று அமைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலின் வளாகத்தினுள் அமைக்கப்படவுள்ள இவ் வாசிகசாலையில் அறநெறியை முதன்மைப்படுத்தும் நூல்களுடன் ஏனைய நூல்கள், தினசரிகள் என்பனவற்றுடன் வாசகர்கள் பயனடையும் வகையில் இவ் வாசிகசாலை அமைக்கப்படவுள்ளது. (ஸ்ரீ-3-30)




## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள கல்லாறு கிராமத்தில் கடற்றொழிலை மேற்கொள்ள அச்சுறுத்தலாகவுள்ள மிதி வெடிகளை அகற்றுதல் மற்றும் கடற்றொழிலினை மேற் கொள்ள அனுமதிப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு - சந்திரகுமார், ஈழமக்கள் ஜன நாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை. தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், படையதிகாரிகள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க பிரதி நிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.

❖ ❖ ❖

விசுவமடுவின் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் கரைச்சி பிரதேச சபை என்பனவற்றின் ஆளுகையில் இரண்டு பொதுச் சந்தைகள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இப்பொதுச் சந்தை அமைப்பால் ஏற்பட்டுள்ள நடைமுறை பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள், புதுக்குடியிருப்பு, கரைச்சி பிரதேசசபை செயலாளர்கள் மற்றும் பொதுச் சந்தை வியாபாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-3-30)

## செய்முறைப் பரீட்சை

(கிளிநொச்சி)

கிளி/ இந்துக் கல்லூரியில் கடந்த 2010 ஆம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களிற்கான செய்முறைப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் மேற்குறித்த மாணவர்கள் பாடசாலைக்கு வருகைதந்து இவ் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளி/ இந்துக் கல்லூரி அதிபர் சி.பாலகிருஸ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-30)

## சிறுவர் பூங்கா வீதியினை புனரமைக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் கிழக்கில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவிற்குச் செல்லும் வீதி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றது. அண்மைய மழை காரணமாக இவ்வீதி மண்ணரிப்பிற்குள்ளாகி சேதமடைந்துள்ளது.

எனவே, இவ் வீதியினை புனரமைப்புச் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (3-30)

# மாசி மாத இராசி பலன்கள்




(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

**எதிர்பார்ப்புகள் நிறைவேறும்**

*வளர்ச்சிப் பாதையிலேயே கவனத்தைச் செலுத்தும் மேஷ ராசி நேயர்களே!*

எதிரிகளைக் கூட நட்பாக்கிக் கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. இல்லையேல் உதிரியாக இருந்தே காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். ஓய்வில்லாது உழைத்து வாழ்வில் மத்திய பகுதியில் வசந்தத்தை வரவழைத்துக் கொள்வீர்கள். மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் நீங்கள் உங்கள் குடும்பத் தகவல்களை மட்டும் அவர்களிடம் சொல்லமாட்டீர்கள்.

உங்களுக்கு இந்த மாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து கொண்டே இருக்கும் என்றே சொல்ல வேண்டும். மாதத் தொடக்கத்தில் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெறுகிறார். தனாபதி சுக்ரன் 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். மன நிம்மதிக்காக இதுவரை ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைத்ததன் பலன் இப்பொழுது பூரணமாகக் கிடைக்கப் போகிறது.

சனி உங்கள் இராசிக்கு 10, 11க்கு அதிபதியாகி அது வக்ரம் பெறுதால் தொழிலில் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி தேவை. கொடுக்கல்–வாங்கல்களில் சில சமயங்களில் வரவேண்டிய தொகையைப் போராடி வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். எனவே, பெருந்தொகைகள் கொடுக்கும்பொழுது கொஞ்சம் யோசித்துக் கொடுப்பது நல்லது.

பெப்ரவரி 13ஆம் திகதி கும்ப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நன்மைகளை அதிகம் எதிர்பார்க்கலாம். வெளி வட்டாரப் பழக்கவழக்கம் விரிவடையும். வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும். சொத்துக்கள் வாங்க விற்க உகந்த நேரமாக இது அமைவதால், பழைய சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்க, விற்க உகந்த நேரமாக இது அமை வதால், பழைய சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்க முன்வருவீர்கள். முன்னோர்கள் சொத்துக்கள் சம்பந்தமாக வைத்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் இலாபம் கூடுதலாகவே கைக்குக் கிடைக்கும்.

பெப்ரவரி 25இல், உங்கள் இராசிக்கு 2, 7க்கு அதிபதியான சுக்ரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி தரும். போட்டிக் கடை வைத்தோர் இடம் மாறிச் செல்வர். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு வந்து சேரும். வாழ்க்கைத் துணை வழியே வருமானம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும் என்பதால், இதுவரை வேலைக்கு முயற்சி செய்தும் கிடைக்காத வாழ்க்கைத் துணைக்கு இப்பொழுது வேலை கிடைக்கும்.

மார்ச் 2ஆம் திகதி மீன இராசியில் புதன் நீச்சம் பெறுகிறார். 3, 6க்கு அதிபதி நீச்சம் பெறுவது யோகம் தான். விபரீத ராஜ யோக அடிப்படையில் செயற்படும் நேரமாக இந்த நேரம் அமையப் போகிறது. எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாட்களாக நடைபெற்ற வழக்கில் திடீர் திருப்பங்கள் ஏற்படும். சகோதரர்கள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

இம்மாதம் வக்ரச் சனியின் இயக்கத்தால் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க, சனீஸ்வர பகவானை வழிபடுவதோடு சனிக்கிழமையன்று ஆஞ்சநேயரையும் வழிபடுவது நல்லது. மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி செய்து மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளலாம்.

**பெண்களுக்கான சிறப்புப்பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாக உங்களுக்கு அமையப் போகிறது. வருமானம் திருப்தி தரும். வருங்கால நலன்கருதி குழந்தைகளுக்காக வங்கிகளில் வைப்புநிதி வைக்க முன்வருவீர்கள். கணவன்–மனைவி உறவில் கனிவு கூடும். பெப்ரவரி 25க்கு மேல் உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கவும், புதிய தொழில் தொடங்கவும், குடும்ப உறுப்பினர்கள் வலியுறுத்துவர். உடல்நிலைத் தொல்லைகள் பறந்தோடும். குல தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டினால் குடும்பப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும்.




(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் பாதங்கள்)

**தடைகள் அகலும் நேரம்**

*உதவும் குணத்தால் உள்ளத்தில் இடம் பிடிக்கும் ரிஷப ராசி நேயர்களே!*

நீங்கள் ஒவ்வொரு விநாடியும் உங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். ஆரம்பகாலத்தில் இருந்ததை விட வயது ஏற ஏற ஆன்மீக நாட்டம் அதிகமாகவே இருக்கும். எப்படியும் வாழலாம் என்று விரும்புவர்களுக்கு மத்தியில் இப்படித் தான் வாழ வேண்டும் என்ற நியதியைக் கடைப்பிடிப்பவர்கள் நீங்கள். சுறுசுறுப்பு என்பது உங்கள் உடலோடு இணைந்தே இருக்கும் என்பதால் எதையு' உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள்.

மாசி மாத 'கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதுவரை மருத்துவச் செலவு என்ற வகையில் செய்த விரயங்கள் இனிக் குறையும். உச்சம் பெற்ற சந்திரன் உங்கள் இராசியில் உலாவரத் தொடங்குவதால் அச்சமில்லாத வாழ்க்கை உங்களுக்கு வரும். அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்போடு பொருளாதார முன்னேற்றம் காண்பீர்கள். இம்மாதம் சனி வக்ரமடைகிறார். உங்கள் இராசியைப் பொறுத்தவரை சனி யோகம் செய்யும் கிரகம். அதன் இயக்கத்தில் சிறு குறைபாடு இருந்தாலும், உங்களுக்கு மன அமைதிக்குறைவு ஏற்படலாம்.

ஆனால், குருவின் பரிபூரண பார்வை சனிக்குக் கிடைப்பதால், நீங்கள் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் மலைபோல் வந்த துயரம் பனிபோல் விலகும்.

மாதத் தொடக்கத்திலேயே கும்ப ராசியில் பெப்ரவரி 13ஆம் திகதி செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். பலம்பெற்ற செவ்வாய் 10இல் சஞ்சரிக்கும்பொழுது எதிரிகள் விலகுவர். இலாபம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் இருமடங்காகும். தொழில் வளர்ச்சி எப்பொழுதும் இல்லாத அளவு உயரும். கொடுக்கல்–வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வாகன யோகம் ஏற்படும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அந்நிய தேச அனுகூலம் உண்டு.

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும், ஆறாமிடத்தில் அதிபதியாகவும் விளங்கும் சுக்ரன், பெப்ரவரி 9ஆம் திகதி 9ஆம் இடத்தில் உலாவரப் போகிறார்.

எனவே தந்தை வழித் தகராறுகள் அகலும். எந்த வழியிலாவது சகோதரர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பலப்படும். பாகப் பிரிவினைகள் சுமூகமாக நடைபெறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடி பதவி உயர்வும், ஊதிய

**சிவல்புரி சிங்காரம்**

உயர்வும் ஏற்படுவதற்கான சூழ்நிலை தோன்றும்.

மீன இராசியில் மார்ச் 2ஆம் திகதி புதன் சஞ்சரித்து நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாகப் பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கம் ஏற்படலாம். வரவேண்டிய பாக்கிகள் வசூலாவதில் சற்று தாமதம் ஏற்படலாம். குருவுடன், புதன் இணைவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி விடும். என்ன இருந்தாலும், நீச்ச புதனை பலப்படுத்த புதன்கிழமை தோறும் விஷ்ணு வழிபாட்டை மேற் கொள்வது நல்லது. சுய ஜாதக ரீதியாக புதன் இருக்கும் பாதசார பலமறிந்து அதற்குரிய சிறப்பு தலங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடு வது நல்லது.

இம்மாதம் இனிய மாதமாக அமையப் பெண் தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். பெரியோர்களின் பிரியத்திற்கு ஆளாகி ஆசிகளைப் பெறுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் சந்திரபலம் கூடுவதால் சஞ்சலங்கள் அகலும். சந்தோஷங்கள் கூடும். சொன்ன சொல்லைக் கடைசி நேரத்தில் காப்பாற்றுவீர்கள்.

பெப்ரவரி 25க்கு மேல் பிரச்சினை ஒன்றில் இருந்து விடுபடுவீர்கள். கணவன்–மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பணத்தை உங்கள் கைகளில் கொண்டு வந்து கொடுத்து கடமையைச் சரிவரச் செய்யச் சொல்வர். பிள்ளைகளின் வெளிநாட்டு முயற்சி வெற்றி தரும்.

(தொடரும்)





வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அமெரிக்கன்மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் கால்கோள்விழா அண்மையில் அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட இளைப்பாறிய அதிபர் பா.வெற்றிவேல், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி உத்தியோகத்தர்களான செல்வி தி.கானபிரியா, திருமதி அ.மீரா ஆகியோர் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதனையும் தரம் ஒன்று மாணவர்களால் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள் :- அல்வாய் செய்தியாளர்)

# நரம்பியல் குறைபாடுகள்

*மருத்துவ உலகில் மிகவும் உலகப் புகழ் பெற்ற திருப்பெயர். நரம்பியல் மருத்துவத்தில் உலகளவில் சிறந்து விளங்கிய மருத்துவர்களில் ஒருவர்தான் அமரர் டாக்டர் பி.இராமமூர்த்தி அவர்கள். இவரிடம் பயின்ற மருத்துவ மாணவர்கள் பல நாடுகளில் புகழோச்சிக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவத்திற் கென்று தரப்படுகின்ற பல விருதுகளைப் பெற்றவர் அமரர் டாக்டர் பி.ராமமூர்த்தி அவர்கள். ஒரு பொன்மாலைப் பொழுதில் அவருடன் நடத்திய நேர்காணலில் அவர் உதிர்த்த மருத்துவ உண்மைகளை நீங்களும்தான் படியுங்களேன்...*

***நன்றி நலம் தரும் மருத்துவ இதழ்***

நரம்புத் தளர்ச்சி என்பதே கிடையாது என்று ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், பலர் நரம்புத் தளர்ச்சி அடையும் என்கிறார்களே?


படித்தவர், படிக்காதவர் எல்லோருமே இப்படி ஒரு கருத்தை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதுபற்றி சில விடயங்களை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். டாக்டர்களில் சிலர் கூட இப்படியான தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும்.

மருத்துவ விஞ்ஞான அடிப்படையில் தான் உடம்பு ரீதியான எல்லா விடயத்தையும் நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கையில் – மனித உடம்பில் நரம்புத் தளர்ச்சி வருவது கிடையவே கிடையாது என்று திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும்.

நம் மனித உடம்புகளில் இருக்கும் நரம்புகள் தளர்வடையும், தளர்ச்சியுறும் என்று கூறுவதும் ஒரு மூடநம்பிக்கை என்று தான் நான் கருதுகிறேன். நமது உடம்பிலிருக்கும் நரம்புகளானது தளர்ச்சி அடையவே அடையாது என்பதே நூறு வீதம் நிஜமாகும். இப்படிச் சொல்வதை நான் வேடிக்கையாகத்தான் பார்க்கிறேன். நமது மூளையும், நரம்புகளும் அளவில்லாத சக்தியினைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. மனத் தளர்ச்சியினைத்தான் காலங்காலமாக மனிதர்களும், சில மருத்துவர்களும் நரம்புத் தளர்ச்சி என்று சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படிச் சொல்வதற்குக் காரணம் – இதை இப்படிச் சொல்கிறவர்களின் அறியாமை என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

உலக துன்பத்திற்குக் காரணம் அச்சமே என்றார் விவேகானந்தர், ஆசை என்றார் புத்தர், வறுமை என்றார் மார்க்ஸ்.... ஆனால், பிளேட்டோ என்கிற அறிஞர்தான் சரியாகச் சொன்னார். 'உலகத் துன்பத்திற்குக் காரணம் அறியாமை' என்று. அதே மாதிரி அறியாமையினால்தான் பல விடயங்களை நாம் தப்பு

## நரம்பு மண்டலம்




தப்பாகப் புரிந்து வைத்துக் கொண்டுள்ளோம்.


நீங்கள் நடைமுறையில் சொல்லிக் கொண்டிருக்கும் நரம்புத் தளர்ச்சி என்கிற மனத்தளர்ச்சியானது மிகவும் அற்புதமான சக்தியையும், ஆற்றலையும் பெற்ற நமது மூளையையும், நரம்புகளையும் அதிகம் பயன்படுத்துவதினால்தான் ஏற்படுகின்றது. இவ்வாறு தளர்ச்சியுறுகின்ற மனத்தை உறுதிப்படுத்த நடைமுறை வாழ்க்கையில் ஏதேனும் வழிகள் உண்டா? என்று நீங்கள் கேட்கலாம்.

உண்டு. யோகாப்பியாசம் எனும் ஆசனங்கள், பிராணாயாமம் என்கிற மூச்சுக் கலைகள் மற்றும் தியானம் போன்ற வற்றை மேற்கொண்டு தளர்ச்சியுறுகிற மனத்தை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதனை எந்தச் செலவும் இல்லாமல் வீட்டிலேயே நாம் மேற்கொள்ளலாம் என்பது கூட பலருக்குத் தெரியாது.

மனத்தளர்ச்சி என்பது ஒருவருக்கு சூழ்நிலையின் காரணமாகக் கூட ஏற்படலாம். இப்படிச் சூழ்நிலைகள் மாறும் போது, தவறான எண்ணங்களை, மன உளைச்சல்களை, மன சங்கடங்களை நிவர்த்தி செய்துகொள்ளும் போது மனத் தளர்ச்சியா னது சரிபட லாம். நம்முடைய நரம் பானது எப்போதும் பலம் பெற்றிருப்பதனால் அதனை மீண்டும் பலப் படுத்திக்கொள்ளலாம். அதற்கு நம்பிக்கையான எண்ணங்கள், உறுதியான மனம், பலவீன மற்றமனம், துணை புரியும் என்பதை உணர வேண்டும்.

உதாரணத்திற்கு மரதன் ஓட்டத்தை எடுத்துக் கொள்வோம். புயல் வேகத்தில் ஓடும் போது நம்மை ஒருவன் முந்து வதைக் கண்டால் அவனை முந்திச் சென்று வெற்றி பெறவேண் டும் என்ற நம்பிக்கை மன தில் தோன்றி அடுத்த நொடியே நமது ஓட்டம் இன்னும் வேகம் கொள்ள ஆரம்பிப்பதை எடுத் துக் காட்டாகக் கூற லாம்.

'இரவில் வீடு செல்ல தயக்கமா உங்களுக்கு? நரம்புத் தளர்ச்சியாக இருக்கலாம்... வாருங்கள் நாங்கள்குணப்படுத்துகிறோம்.....' என்கிற ரீதியில் நிறைய விளம்பரங்கள் வருகின்றனவே.... அதனைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்கள் என்ன டாக்டர்?



இன்று பத்திரிகை,தொலைக்காட்சி, போஸ்டர்,நோட்டீஸ் போன்றவை மூலம் இப்படி வரும் விளம்பரங்களை நீங்கள் பார்த்திருக் கலாம். 'உங்களுக்கு நரம்புத் தளர்ச்சியா? இரவில் வீடு செல்ல தயக்கமா? என்கிற ரீதியில் சகட்டு மேனிக்கு இன்று விளம்பரங்கள் வருகின்றன. இந்த விளம்பரங்களை சிட்டுக் குருவி – வெட்டுக் கிளி போன்ற லேகிய வியாபாரிகளும்' சில லொட்ஜ் டாக்டர்களும் விரும்பி பணம் சம்பாதிப்பதற்காக விளம்பரம் செய்கின்றனர். இந்த விளம்பரங்கள் எல் லாமே போலித் தனமான வைதான். எனினும் கூட இந்த மருந்துகளை மக்கள் தேடிச் சென்றுவிரும்பி உண்ணக் காரணம் இவற்றின் மீது மக்களுக்கு இருக்கின்ற நம்பிக்கைகளே. இந்த மருந்தை உண்டால் குணமாகும் என்கிற நம்பிக்கையை அவர்கள் மறைமுக மாக விதைப்பதனால் நரம்புத் தளர்ச்சி என்கின்ற மனத் தளர்ச்சி ஓரளவு குணம் பெற வாய்ப்பு

நரம்பியல் நிபுணர்
டாக்டர் பி.ராமமூர்த்தி,MS.,FRCS.,
முன்னாள் அப்பலோ மருத்துவமனை மருத்துவ நிபுணர்
சென்னை

உண்டு. அதாவது நோயினை எதிர்க்கும் நோய் எதிர்ப்பு சக்தி நம்பிக்கையால் பலப்படுகின்றது. இந்த நம்பிக்கைகள் குழந்தை அம்மா விடமும், நோயாளிகள் நல்ல டாக்டர்களின் மீதும், மக்கள் கடவுளின் மேலும் (Superior force) வைத்திருக்கும் நம்பகத்தன்மைக்கு இணையானது. ஆக நம்பிக்கையால் ஏற்படும் மன உறுதியால் உடம்பானது நன்றாகிறது. இருப்பினும் கூட இத்தகைய விளம்பரங்களை அனுமதிக்கலாகாது என்பது என் கருத்து.

நரம்புத் தளர்ச்சி என்று மக்களால் கூறப்படுகின்ற மனத்தளர்ச்சியினையும், மன நல பாதிப்பினையும் (மன நலக் குறைபாடுகளையும்) ஒன்றென நம்மில் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இரண்டும் வெவ்வேறானது ஆகும்.


(தொடரும்)

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

# எலும்பு அரிப்பு நோய்க்கு ஏற்ற மருந்துகள்!

இன்று மனித சமுதாயத்தை மிகவும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஓசையற்ற உயிர்கொல்லி நோய்' எலும்பு அரிப்பு நோய்'. ஆசியாவில் 40 சதவீத பெண்கள், மாதவிடாய் நின்றபின் எலும்பு அரிப்பு நோய் ஏற்பட்டு அதனால் அவதிப்பட்டு வருகின்றனர். இப்போதே பொதுச்சுகாதார அமைப்புகளும் மருத்துவர்களும் போர்க்கால அடிப்படையில் இந் நோய் தடுப்பு முறைகளை மேற்கொள்ளா விட்டால் நம் அடுத்த தலைமுறையினரில் மூன்றில் ஒரு பங்கினர் ஊனமுற்ற நிலைக்கு தள்ளப்படுவர் என்பது அதிர்ச்சி தரும் தகவலாகும். இந்நோயினால் எலும்பு முறிவதும் சகஜமாகி விடும்.எலும்புகள் வலுவிழக்கவும் செய்யும்.

பிறந்தது முதல் 30 வயது வரை எலும்புத் திசுக்கள் ஆரோக்கிய நிலையில் இருக்கும். அடுத்த 10 ஆண்டுகளும் இந்நிலை நீடிக்கும். ஆனால், மாதவிலக்கு நின்ற பெண்களுக்கு எலும்பு திசுக்கள் சுருங்கும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இந்நிலை நீடிக்கும் போதுஎலும்பு முறிவு ஏற்படும் அபாயம் அதிகரிக்கிறது. எலும்பு அரிப்பு நோய் எந்த அறிகுறியையும் வெளிப்படுத்திக் கொண்டு வருவதில்லை.எலும்புகளில் எலும்பு அரிப்பு ஏற்பட்டு அது பலவீனமாக இருக்கும் போது நாம் பலமாக இருமினால் கூட அது எலும்பு முறிவை ஏற்படுத்தும். பெண்களுக்கு அதிக அளவில் ஏற்படும் மார்பகப் புற்று நோய், இதய நோய் மற்றும் மூளை நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளைவிட' எலும்பு அரிப்பு நோய்' தான் மிக அதிக அளவில்



ஏற்படுகிறது என்பதும் அதிர்ச்சியளிக்கும் ஒரு புள்ளி விபரமாகும். இரண்டில் ஒரு பெண் தன் வாழ்நாளில் எலும்பு அரிப்பு நோயால் ஏற்படும் எலும்பு முறிவால் அவதிப்படுகிறார். ஆண்களை விட பெண்கள் இந்நோயால் பாதிப்படையக் காரணம், பெண்களுக்கு ஆண்களை விட எலும்புத் தசைகள் குறைவு என்பது தான். மேலும் மாதவிலக்கு நின்ற பெண்களுக்கு எலும்புகள் பாதிப்படைவதும் பலவீனம் அடைவதும் முக்கிய காரணமாகும்.

பெண்களுக்கு 35 வயது வரையில் எலும்புகளின் வளர்ச்சியும் மொத்த எடையும் ஒரே சீராக இருக்கும். அதன்பின்னர் ஒரு எதிர் மறை சுண்ணாம்புச் சத்து சமநிலை அடைகிறது. அது தான் எலும்பு அரிப்பின் ஆரம்ப நிலை. 35 வயதுக்குப் பின் ஒரு பெண்ணுக்கு ஒவ்வொரு வருடமும் 0.3 சத வீதம் என்ற அளவில் எலும் பின் எடையில் இழப்பு ஏற்படு கிறது. மாதவிலக்கு நின்றபின் எடையில் பெண்களுக்கு எலும்பு எடை குறைவு0.5 சத வீதம் என அதிகரிக்கிறது. இந்த வேகத்தில் ஒரு பெண் தன் 60 வயதிற்குள் 30 முதல் 35 சத வீத அளவுக்கு எலும்பின் எடை குறையும் அபாயத்தை எட்டுகிறாள். இந்நிலையில் எலும்பு முறிவுகள் வெகுசுலபமாக ஏற்படுகிறது.

ஆண்களுக்கு இந்த எலும்பு அரிப்பு விகிதம் பெண்களுடையது போல் இல்லை. ஆண்கள்70 வய திற்கு மேல்தான் இந்நிலையை எதிர்கொள் கின்றனர். பொதுவாக பெண்களைவிட ஆண் களின் எலும்புத் திசுக்கள் வலிமையாகவும் உறுதியாகவும் அளவில் அதிகமாகவும் உள்ளன. இதற்கு காரணம் அவர்களின் உடற்பயிற்சியோடு கூடிய தினசரி வாழ்க்கை முறையாகும். சதவீத அடிப்படையில் சொல்வதானால் எலும்பு அரிப்பு நோய் 80 சத

டாக்டர் ப.உ.லெனின்
சென்னை

வீதம் பெண்களுக்கும் 20 சதவீதம் ஆண்களுக்கும் வருகிறது.

நம் எலும்புகள் கல்போன்று உறுதியானது என்று நினைக்கிறார்கள். ஆனால், இது தவறான கருத்து. பல்வேறு இரசாயன ஊக்கிகளின் தாக்குதலுக்கு இணக்கமாகி சுண்ணாம்புச் சத்து உயிரியத்தால் எலும்பு மென்மைப்பட்டு, வலுக்குறைந்து முறியும் நிலைக்கு உள்ளாகி விடுகிறது. இதுபோன்ற எலும்பு முறிவு ஏற்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறவேண்டி கட்டாயமும்இயல்பு நிலைக்குவராமல் அவதியுறும் தன்மையும் ஏற்படுகிறது. எலும்பு அரிப்பு முதுகெலும்பில் ஏற்பட்டால் சாதாரணமாகக் குனியும் போது கூட எலும்பு முறிவு ஏற்பட்டு விடும். சாதாரண சுளுக்கும் கூட எலும்பு முறிவுக்கு காரணமாகி விடும். இது தீமைகளுக்கு அடிகோல்கிறது. மாதவிலக்கு நின்ற பெண்களுக்கு 'ஈஸ்ரோஜன்' அளவு குறைவதும் எலும்பு அரிப்புக்கு ஒரு முக்கிய காரணமாக அமைகிறது.

சுண்ணாம்புச் சத்து சமநிலையில் இருக்குமேயானால் அது எலும்பு அரிப்பு நோயையும் அதன் தொல்லைகளையும் தவிர்க்க உதவும். அதிலும் பெண்களின் குழந்தைப் பருவம் முதல் முழு வளர்ச்சிப் பருவம் வரையிலும் சுண்ணாம்புச் சத்து சமநிலையில் இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.மேலும் ஒரு பெண் கருவுற்ற காலங்களில் மட்டுமன்றி குழந்தை களுக்கு தாய்ப் பால் கொடுக்கும் காலத்திலும் சுண்ணாம்புச் சத்து அவசியம் தேவை. மாதவிலக்கு நிற்கும் காலம் வரும் போது 'ஈஸ்ரோஜன்' குறைபாடு ஏற்படுவதால் அதுவும் எலும்பு அரிப்பு நோய்க்கு ஏதுவாகிறது.

(தொடரும்)

# எகிப்தில் நாடாளுமன்றம் கலைப்பு; அரசியல் அமைப்பு சட்டம் நிறுத்தம்

## அந் நாட்டு இராணுவம் அதிரடி



எகிப்தில் நாடாளுமன்றத்தை கலைத்த அந்நாட்டு இராணுவம் அரசியல் சட்டத்தை நிறுத்தி வைக்க உத்தரவிட்டுள்ளது.

எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராக 18 நாட்களாக பொதுமக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

இதனால் அங்கு முபாரக்கின் 30 ஆண்டுகால சர்வாதிகார ஆட்சி வீழ்ந்தது. ஜனாதிபதி முபாராக் நாட்டை விட்டு ஓட்டம் பிடித்தார்.

இதைத் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளது. இருந்தும் இன்றும் அங்கு அமைதி திரும்பவில்லை. போராட்டம் நடைபெற்ற கெய்ரோவின் தக்ரீர் சதுக்கத்தில் மக்கள் கூடியுள்ளனர்.

எகிப்து போன்ற நாடுகளில் ஜனாதிபதி இல்லாமல் ஆட்சி நடத்துவது மிகவும் கடினம்.

எனவே, உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். அதற்காக கவுன்சில் அமைக்க வேண்டும். பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும். மேலும் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். ஆகிய கோரிக்கை களை வலியுறுத்தினர். எனவே, கலைந்து செல்லாமல் ஆயிரக் கணக்கான மக்கள் தக்ரீர் சதுக்கத்தில் கூடி நின்றனர்.

அவர்கள் அங்கிருந்து வெளியேறும்படி இராணுவ வீரர்கள் கேட்டுக்கொண்டனர். அதற்கு மக்கள் மறுத்து விட்டனர். இதைத் தொடர்ந்து மக்களின் கோரிக்கையை ஆளும் இராணுவ சபை ஏற்றுக்கொண்டது. இதையடுத்து பாராளுமன்றத்தின் மேல்சபை, கீழ் சபை என இரு அவைகளையும் உடனடியாகக் கலைக்க உத்தரவிட்டது. மேலும் தற்போதுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் தேவைப்படுவதால் அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி இன்னும் 6 மாதத்தில் அதாவது செப்டெம்பர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் எனவும் அறிவித்தது. இந்த அறிவிப்பு அரசின் அதி கார பூர்வ தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆனால், பொலிஸாரிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. தங்களுக்கும் பாதுகாப்பு ஊழியர்களுக்கும் பெரிய அளவில் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும் என வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

தங்கள் துப்பாக்கிகளை உயர்த்தி வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு அரசுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

(ஸ்ரீ)

## ஈராக்கில் தற்கொலை தாக்குதலில் 28 பேர் பலி

ஈராக்கில் சன்னி முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் சமாரா நகரில் ஷியா முஸ்லிம்களின் வழிபாட்டுத் தலம் ஒன்று உள்ளது. இந்த மசூதியின் கூரை தங்கத்தால் வேயப்பட்டது. இது 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் ஹாசன் அல் அஸ்காரியின் நினைவாக 994ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த மசூதிக்கு ஷியா முஸ்லிம்கள் புனிதப் பயணமாக செல்வது வழக்கம்.

இந்த மசூதிக்கு செல்வதற்காக ஷியா முஸ்லிம்களை ஏற்றிக் கொண்டு ஒரு பஸ் சமா ராவுக்கு சென்றது. அப்போது தற்கொலை தீவிர வாதி ஒருவர் தன் உடலில் கட்டி இருந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தார். இதில் பஸ்சில் இருந்த 28 பேர் பலியானார்கள். 24 பேர் காயம் அடைந்தனர். (ஸ்ரீ)



இனி இவர் படம் இங்கு எதற்கு?... எகிப்து ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு எதிராக 17 நாட்களாக போராடிய பொதுமக்களுக்கு வெற்றி கிடைத்தது. இதனையடுத்து கெய்ரோவிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்த அவரது உருவப்படம் அங்கிருந்து அகற்றப்பட்டது. இதை மாளிகை உயரதிகாரிகளே அதிரடியாக அகற்றுவதை படத்தில் காணலாம்.





# முஷாரப்பை எங்களிடம் ஒப்படையுங்கள் இங்கிலாந்திடம் பாகிஸ்தான் வலியுறுத்தல்

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ ராவல்பிண்டியில் நடந்த தேர்தல் பிரசார பேரணியின் போது தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார். இந்த வழக்கு தற்போது ராவல்பிண்டியில் உள்ள தீவிர வாத தடுப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. தற்போது இந்த வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பின் பெயரும் இடைக்கால குற்றப்பத்திரிகையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏனெனில் பெனாசிர் கொலை செய்யப்பட்ட போது முஷாரப் ஜனாதிபதியாக இருந்தார். அவருக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அவர் தவறிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில் தீவிரவாத தடுப்பு நீதிமன்றில் விசாரணைக்காக முஷாரப் தொடர்ந்து ஆஜராகவில்லை. எனவே அவர் விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என அரசின் சிறப்பு சட்டத்தரணி குற்றம் சாட்டினார்.

இதைத் தொடர்ந்து முஷாரப்பை கைது செய்ய பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. இதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஜனாதிபதி பதவியை இழந்த பின் தற்போது முஷாரப் லண்டனில் தங்கியுள்ளார். மேலும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தை இதுவரை இங்கிலாந்துடன் பாகிஸ்தான் செய்து கொள்ளவில்லை.

எனவே, அவரை பாகிஸ்தான் கொண்டு வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல. எனவே, பெனாசிர் கொலை வழக்கு குறித்து விசாரணை நடத்துவதற்காக முஷாரப்பை தங்களிடம் ஒப்படைக்கும்படி இங்கிலாந்திடம் பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானுடன் பேச்சு இல்லை அமெரிக்கா அதிரடி முடிவு


பாகிஸ்தானில் தனது தூதரக அதிகாரி கைது செய்யப்பட்டதால் ஆத்திரமடைந்துள்ள அமெரிக்கா பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தையை தள்ளி வைத்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றி வரும் ரேமண்ட் டேவிஸ் என்பவர் கடந்த ஜனவரி 27ஆம் திகதி இரண்டு பாகிஸ்தானியர்களை சுட்டுக்கொன்ற வழக்கில் கைது செய்யப்பட்டார்.

தூதரக அதிகாரியை உடனடியாக விடுவிக்காவிட்டால் இரு தரப்பிலான உயர் மட்ட பேச்சுவார்த்தை இரத்து செய்யப்படும். பாகிஸ்தானுக்கான நிதியுதவி இரத்து செய்யப்படும் என்று அமெரிக்கா மிரட்டல் விடுத்து வந்தது. ஆனால், எதற்கும் பாகிஸ்தான் அசைந்து கொடுக்கவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான், ஆப்கான் மற்றும் அமெரிக்கா இடையிலான முத்தரப்பு பேச்சுவார்த்தை எதிர்வரும் 23 ஆம் 24ஆம் திகதிகளில் வோஷிங்டனில் நடக்க இருந்தது. இது குறித்து நேற்று முன்தினம் பேட்டியளித்த அமெரிக்க வெளியுறவு செய்தித் தொடர்பானர் கிரவுலி, பாகிஸ்தான் அரசியலில் மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் முத்தரப்பு பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்படுகிறது. இதற்கு பாகிஸ்தான் மற்றும் ஆப்கான் அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்றார். (ஸ்ரீ-2)

# உரையை மாற்றி வாசித்தது பெரிய விடயம் அல்ல

## சொல்கிறார் கிருஷ்ணா



(நியூயோர்க்)

ஐ.நா பாதுகாப்பு சபையில் கடந்த சனிக் கிழமை உரை நிகழ்த்திய இந்திய வெளியுற வுத்துறை அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணா தனது உரையை படிக்காமல் வேறு ஒரு நாட்டின் உரையை வாசித்ததால் குழப்பம் ஏற்பட் டது. இது பற்றி கருத்து தெரிவித்த அவர்,

இதில் தவறு ஒன்றும் இல்லை.இது ஒரு பெரிய விடயமும் அல்ல என்று கூறினார். ஆனால் இந்த இச்சம்பவம் துரதிர்ஷ்டவசமா னது என பா.ஜ.க கண்டனம் தெரிவித்துள் ளது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா பாதுகாப்பு சபையில் பாதுகா ப்பு மற்றும் மேம்பாடு குறித்த ஆ லோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை நடந்தது. இந்த கூட்டத்தில் பங்கேற்ற இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா தனது உரையை வாசிப்பதற்கு பதிலாக போர்த்துக்கல் அமைச்சரின் உரை யை வாசிக்கத் தொடங்கினார். இதனால் கூட்டத்தில் பங்கேற்றவர் கள் மத்தியில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. உடனே அருகிலிருந்த ஐ.நா வுக்கான இந்தியத் தூதர் ஹர்தீப் சிங் பூரி அமைச்சரிடம் தவறை சுட்டிக் காட்டினார். தவறை உணர்ந்த கிருஷ்ணாவும் பின்னர் தனது உரையை வாசித்தார். மூன்று நிமிட ங்கள் மட்டுமே இந்தக் குழப்பம் நீடித்தது.

இது குறித்து நேற்று முன்தினம் விளக் கம் அளித்த கிருஷ்ணா, உரையை மாற்றி வாசித்ததில் தவறு ஒன்றும் இல்லை. அது பெரிய விடயமும் அல்ல. என் முன்னால் நிறைய பேப்பர் கிடந்ததால் இந்த தவறு நிகழ் ந்து விட்டது. இதுபோன்ற உரைகள் முதல் பத்தியில் பொதுவான விடயத்தையே கொண் டிருக்கும். அந்தப் பத்தி பாதுகாப்பு சபையில் தலைமைப் பொறுப்பேற்ற நாட்டுக்கு வாழ் த்து கூறுவதாக அமைந்திருக்கும் என்றார்.

இச்சம்பவம் பற்றி பேட்டியளித்த பா.ஜ. மூத்த தலைவர் எம்.வெங்கையா நாயுடு ,

இது துரதிர்ஷ்டவசமானது. இதன் மூலம் இந்தியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தி விட்டார் கிருஷ்ணா. அவர் நடந்து கொண்டது குறித்து பிரதமர் மன்மோகன் சிங் விளக்கம் அளிக்க வேண்டும் என்று கண்டனம் தெரி வித்தார். (ஸ்ரீ)



விபச்சார குற்றச்சாட்டில் சிக்கியுள்ள இத்தாலிய ஜனாதிபதி சில்வியோ பெர்லுஸ்கோனி (74) பதவி விலகக் கோரி இந்தாலியின் 200 நகரங்களில் பெண்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேபிள்ஸ் நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் ஆண்களும் கலந்து கொண்டனர்.

> எந்தச் செயலையும் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்துக் கொண்டிருக்காதீர்கள். நடக்க நடக்கத்தான் ஊர் வந்து சேரும். அதுபோல் நல்ல செயல்களையும் செய்வதற்கு அனுமதியுங்கள். *– ஓர் அறிஞர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழர்களுக்கான அரசியலில் முத்தநாதர்கள் அதிகம்; தமிழினமே கவனம்

இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைமைக்கான காரணங்கள் குறித்துப் பல்கலைக் கழகப் புத்திஜீவிகள் ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய ஆய்வுகள் தமிழினத்தின் எதிர்கால ஆரோக்கியத்திற்கு உதவும் என்பதுடன், நடந்த தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் வழிவகுக்கும்.

உலகில் பாதிக்கப்பட்ட இனங்கள் மீட்சி பெறுவதற்குப் புத்திஜீவிகளின் அறிவும் ஆய்வுகளுமே காரணமாக இருந்தன என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

எனவே தோல்வி என்று நினைத்துத் துவண்டு விடாமல், மீட்சி பெறுவதற்கான வழிகள் பற்றிச் சிந்திப்பது அவசியம்.

இத்தகைய சிந்தனைகள் – ஆய்வுகள் ஒரு போதும் இந்நாட்டிற்கு எதிரானதல்ல.

மாறாக இலங்கைத் திருநாட்டின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் இவை தேவையானதாகும்.

தமிழர்கள் சீரழிந்து சின்னாபின்னமாகிப் போகும்போது இலங்கை அபிவிருத்தி அடைந்துள்ளது என்று எவருமே புகழ முடியாது.

இன்றைய காலச் சூழ்நிலையில் தமிழர்களின் பின்னடைவு சில தரப்பிற்குத் தேவையானதாக இருந்தாலும் இந்தப் பின்னடைவு தொடருமாயின் அது இந்த நாட்டின் அபிவிருத்திக்கும் அமைதிக்கும் பங்கமாக அமைந்துவிடும்.

எனவே இலங்கையில் தமிழ் மக்களின் மீட்சியும் எழுச்சியும் அவசியம். இது உரிய காலத்தில் நடைபெறாவிட்டால், அதற்காகச் சிங்கள மக்கள் கவலை கொள்ளும் காலமும் அதிக தூரத்தில் இல்லை.

இந்நிலையில் தமிழ் மக்களின் இன்றைய நிலைமைக்கான காரணம் குறித்து ஆய்வு இடம்பெறுமாயின், தமிழர்களின் பாதகத்திற்குத் தமிழர்களே காரணம் என்ற முடிபு தெரியவரும்.

ஆம், தமிழ் மக்கள் எவரையும் தீர விசாரித்து அறியாமல் அவர்களை நம்பிவிடுவர்.

நம்பிவிட்டால் பின்பு அதனை மாற்றுவது முடியாத காரியம்.

இந்தப் பலவீனத்தை அதிகம் தெரிந்துகொண்டவர்கள் தமிழ் அரசியல்வாதிகளே.

அவர்களே தமிழ் மக்களை இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டனர். இப்போதுகூட மிகப் பெரும் மோசமான தமிழ் அரசியல்வாதிகளை நாம் நம்பிக்கொண்டிருப்பது மகா துன்பம்.

எங்களில் மெய்ப்பொருள் நாயன்மார்களை விட மெய்ப்பொருள் நாயனாரைக் குத்திக் கொன்ற முத்தநாதர்கள் அதிகரித்துவிட்டார்கள்.

இந்த வேடதாரிகளைக் கண்டுகொள்வது கடினமே! தமிழினத்திற்காகப் பாடுபடுவது போலக் காட்டிக்கொண்டு தமிழினத்தின் கருவறுக்கச் சதி நடக்கிறது. அதற்காகப் பல கோணங்களில் முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அந்த முயற்சிகள் எவை என்பதை ஒரு கணம் நின்று நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள். உண்மை தெரியவரும்.

தமிழ்ப் பற்றையும் இனப்பற்றையும் அறுத்தெறிந்து தறிகெட்ட சமூகத்தை உருவாக்க ஒரு பெரும் முயற்சி. அந்த முயற்சியைக் கண்டறியாவிட்டால், முத்தநாதர்கள் மெய்ப்பொருள் நாயன்மார்களை எளிதாக வெற்றி கொண்டு விடுவர். கவனம்.

# முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் IIIஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**யாழ்ப்பாண மாவட்டம்**

எம்.குமுதினி – சுன்னாகம், கே. கிருஷ்ணநிலானி – ஆனைக்கோட்டை, வீ.இமயவள்ளி – மிருசுவில், ஏ.சுஜந்தன் – யாழ்ப்பாணம், ரி.விதுசா – உடுவில் கிழக்கு, ஜி.சிவரஞ்சினி – புலோலி, கே.கஜனி–நீர்வேலி வடக்கு, எஸ்.மாலதி – இளவாலை, கே.ரங்கநாதன்–சாவற்கட்டு, எஸ்.ஜனனி– அல்வாய் கிழக்கு, ஏ.தாரங்கன்–நல்லூர், ஆர்.ரஜீந்தினி–சண்டிலிப்பாய், ஆர். செந்தில்– பெரியவிளான், எஸ்.சுபாஸ்கரன்– கொக்குவில், ரி.நித்தியா– புலோலி தெற்கு, எம்.யதீஸ்வரன்– அச்செழு, என். பாமினி– இமையாணன்கிழக்கு, ஆர்.ஜனார்த்தன்– திருநெல்வேலி, வி.கிஷோ– மானிப்பாய், கே.அமர்நாத்– நீர்வேலி வடக்கு, சி.திவ்யன்– சுதுமலை வடக்கு, கே.சிறிதரன்– யாழ்ப்பாணம், எஸ். சுதாகரன்– கொக்குவில், எஸ்.கயந்தினி– மிருசுவில், எஸ்.ஏ.விஜயகுமார்– சுப்பர்மடம், கே.கிரிஜா– சுன்னாகம், என்.நித்யா– கோண்டாவில், பி.நிவேதிகா– யாழ்ப்பாணம், ரி.சுபோதினி– சுழிபுரம், எம்.சுதாகர்– பருத்தித்துறை, என்.ஜெயமயூரன்– கரவெட்டி, வி.துவாரகன்– அல்வாய், ஆர்.சியாமினி– அச்சுவேலி, எஸ்.அகல்யா– கந்தர்மடம், பி.பிரதீபா– கைதடி, ஏ.கார்த்திகா– வல்வெட்டித்துறை

எம்.நர்மதா– கரவெட்டி, ரி.தாரணி– பண்ணாகம், வி.ஜெயானி– அல்வாய், கே.அர்ஜனா– கரவெட்டி, பி.ஜெயதர்சன்– கரவெட்டி, எஸ்.அனுஷா– அல்வாய், என்.மதுராம்பிகை– யாழ்ப்பாணம், ஆர்.கம்சத்தனி– யாழ்ப்பாணம், எம்.ரூபன்– பெரியமாவடி, ஆர்.ரமணி– அல்வாய், எம்.ஜெயமிதுசன்– மல்லாகம், எம்.சொரூபினி– யாழ்ப்பாணம், ஆர்.ராதிகா– நீர்வேலி, ஆர்.வாகினா– சுன்னாகம், எஸ்.காயத்திரி– அளவெட்டி, எஸ்.நதிபரன்– நல்லூர் வடக்கு, எம்.புவனதீபன்– கொடிகாமம், பி.தர்சிகா– மீசாலை, பி.பிரசாந்தி– வல்வெட்டித்துறை, எம்.தெய்வேந்திரா– பருத்தித்துறை, எஸ்.மார்க்கண்டு– உடுப்பிட்டி, எஸ்.பிரசாத்– கரவெட்டி

எஸ்.சுதர்சன்– பருத்தித்துறை, கே. அனுஜன்– கோப்பாய், வி.தவராசா– காரைநகர், என்.கோபிகா– சாவகச்சேரி, கே.வைகுந்தன்– புலோலி, கே.எழில் முதல்வன்– வரணி, எஸ்.தாரணி– புலோலி மேற்கு, எம்.இந்துஜா– கொக்குவில், என்.நந்தகுமார்– நீர்வேலி, என்.செந்தூரன்– நவாலி கிழக்கு, என்.மயூரி– உரும்பிராய், கே.நிலாணி– கொழும்பு, பி.தபோதினி– நவாலி வடக்கு, எஸ்.சிவநயனி– அளவெட்டி வடக்கு, எஸ்.ரஜீவி– உடுவில், எஸ்.சுவாதிகா– சங்கரத்தை, ரி.பிரணவன்– திருகோணமலை, வி.ரோகினி– கோப்பாய், எப்.கனிஸ்டமேரி– பருத்தித்துறை, பி.நிசாந்தினி– அல்வாய், ஆர்.நிரூபன்– புலோலி, எஸ்.சுதாராஜன்– கரவெட்டி,

சி.அனுஷா– ஊர்காவற்துறை, கே.பிரசாந்தன்– கோண்டாவில், வி.சுதன்– தாழையடி, எம்.சஞ்ஜித்– மீசாலை வடக்கு, எஸ்.சுகுனேஸ்– கரவெட்டி, எஸ்.சங்கநாதன்– தும்பளை மேற்கு, ரி.சியாமளா– தம்பசிட்டி, ஜி.குகன்– கந்தர்மடம், ஜெ.பௌத்திரா– மாதகல், என்.கஜமுகன்– இளவாலை, எஸ்.தேவகி– கலட்டி, எஸ்.சிவசொரூபி– பண்ணாகம் தெற்கு, எஸ்.வேலழகன்– சுதுமலை தெற்கு, எஸ்.மயூரன்– கரவெட்டி, எஸ். காயத்திரி– நவாலி வடக்கு, வி.மிதுர்சா– ஓட்டுமடம், கே.நதிகா– மீசாலை, என். சங்கமி– கரவெட்டி, பி.அனுராதா– பருத்தித்துறை, பி.துளசிகா– ஆவரங்கால், கே.துளசி– நல்லூர், எம்.குகரூபன்– வண்ணார்பண்ணை, பி.கணநாத்– கொக்குவில் கிழக்கு, எஸ்.கிருத்திகா– இணுவில் தெற்கு, எஸ்.லாவணியா– அளவெட்டி வடக்கு, ரி.மணிமொழி– சித்தன்கேணி, ரி.லுசாந்தி– வட்டுக்கோட்டை, வி.ஜனார்த்தனன்– குப்பிளான் வடக்கு, ஜெ.மிதிலா– மட்டுவில் தெற்கு,

எம்.சிவசோதி– கரவெட்டி மேற்கு, ஆர்.ரமேஸ்– வல்வெட்டித்துறை, எஸ்.நவகார்த்திகா– புலோலி வடக்கு, கே.துசிதா– நல்லூர், கே.புஸ்பவதனி– யாழ்ப்பாணம், கே.குணஜா– கோப்பாய் வடக்கு, என்.சிவரூபன்– நீர்வேலி வடக்கு, பி.கலாரஞ்சினி– சிறுப்பிட்டி கிழக்கு, பி. சிவராஜினி– உரும்பிராய் மேற்கு, ஆர். கீர்த்திகா– கோப்பாய் தெற்கு, எஸ். அபர்ணா– வெள்ளவத்தை, எஸ்.கண்ணதாஸ்– சுதுமலை தெற்கு, ரி.இந்திரபாகுலிஜன்– கோப்பாய், ஏ.பிரதீபன்– சாவகச்சேரி வடக்கு, எம்.சரிதாஸ்– மட்டுவில் தெற்கு, எஸ்.தர்மிலா– மீசாலை வடக்கு, ஏ.பிருந்தா– கரணவாய் வடக்கு, பி.பாரதி– புலோலி வடக்கு, ஏ.சர்மினி– இராசாவின்தோட்டம், என்.சுபாசினி– ஆனைப்பந்தி, என்.ஜே.ஜே. ஜெசிகா– யாழ்ப்பாணம், பி.சுரேகா– தொண்டைமானாறு, பி.திலீபன்– அராலி தெற்கு, பி.யாழினி– சங்கரத்தை, பி.சிவகௌரி– யாழ்ப்பாணம், ஆர்.சிவகாமி– புத்தூர், ஆர்.தர்சிகா– கோண்டாவில், எஸ்.ஜனனி– நல்லூர், எஸ்.சோபிகா– கோண்டாவில் கிழக்கு, ரி.மதுரா– புத்தூர் கிழக்கு, யு.சுகிர்தா– சுழிபுரம்,

வி.சிவாஜினி– சங்கரத்தை, ஏ.லக்ஷினி– வல்வெட்டித்துறை, எஸ்.சுபாஜினி– நெல்லியடி கிழக்கு, ஏ.நித்தியநர்மதன்– தெல்லிப்பளை, கே.அபிராமி– கந்தர்மடம், கே.பிரதீஸ்வரன்– யாழ்ப்பாணம், கே.ராஜ்குமார்– அச்சுவேலி வடக்கு, என்.பர்மிலா– மல்லாகம், ஆர். ஜெயசுதர்ஜினி– அச்சுவேலி தெற்கு, ஆர்.கௌசிகா– அரியாலை, எஸ்.சிவரூபினி– யாழ்ப்பாணம், எஸ்.இலாவண்யா– அளவெட்டி தெற்கு, எஸ்.சுனந்தன்– ஊரெழு கிழக்கு, எம்.மாலதி– மந்துவில் மேற்கு, ஏ.கிருபாகரன்– பொலிகண்டி கிழக்கு, ஏ.அகிந்தன்– அல்வாய் வடக்கு, ஜே.ஜோதிகா– சுண்டுக்குழி, கே.ஜெனார்த்தனி– கந்தர்மடம், கே.ஜெயபுஸ்பா– தெல்லிப்பழை கிழக்கு, கே.மதுராஜ்– சுன்னாகம் கிழக்கு, கே.நிரஞ்சன்– வண்ணார்பண்ணை, எல்.மயூரன்– கோப்பாய், எம்.மதுரா– கட்டுவன் மேற்கு, எம்.சி.ஆர்.எல்.வேணுகா– யாழ்ப்பாணம், எஸ்.அரிகரன்– சுண்டுக்குழி, ஏஸ்.வசீகரன்– அச்சுவேலி, எஸ். விதுஜா– உடுவில் தெற்கு, எஸ்.குணவர்சன்– இணுவில் மேற்கு, எஸ்.பிரியநந்தினி– தோணிக்கல் வவுனியா, வி.நிமலேஸ்வரன்– யாழ்ப்பாணம், ஆர்.பிரசாந்தி– வேப்பங்குளம் வவுனியா, ஜெ.இராஜமல்லிகை– சாவகச்சேரி, எம்.சுபாகினி– சங்கத்தானை, ஏ.ஆர்.மேரி வினித்தா– கரவெட்டி தெற்கு, இ.கௌரிசா– கரவெட்டி, பி.தட்ஷாயினி– கரணவாய் தெற்கு, ஆர்.சோபர்னா– கரணவாய் மத்தி, எஸ்.பிரத்தனாதேவி– கரவெட்டி, எஸ்.பிரதீபன்– தொண்டைமானாறு,

வி.வித்தியானந்– கல்வியங்காடு, கே.அனிதா– மூளாய் கிழக்கு, கே.றஜித்தன்– கொக்குவில் கிழக்கு, எம்.ராஜி– இருபாலை, என்.சசிரேகா– யாழ்ப்பாணம், எஸ்.ஐங்கரி– உரும்பிராய் கிழக்கு, எஸ்.வளர்மதி– அளவெட்டி மேற்கு, எஸ்.சிவதீபன்– புன்னாலைக்கட்டுவன், எஸ்.கம்சிதா– கோண்டாவில் மேற்கு, எஸ்.ரஜீவ்– நீர்வேலி வடக்கு, ரி.துஷி– ஆவரங்கால் மேற்கு, ரி.கபிதா– கோண்டாவில் மேற்கு, ரி.முகுந்தன்– உரும்பிராய் வடக்கு, யு.பிரியந்தினி– தொல்புரம், ரி.திவாகரன்– பருத்தித்துறை, வி. வைகுந்தன்– பருத்தித்துறை, கே.யோகேந்திரன்– இமையாணன் வடக்கு, எம். மேகலா– நெல்லியடி கிழக்கு, ஆர்.கமலதாசன்– கரவெட்டி மேற்கு, எஸ்.கவிதாம்பிகை– கரணவாய் மேற்கு.

*(ஏனைய மாவட்டங்கள் நாளை தொடரும்)*

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்




சிலர் பிறக்கும் போதே இன்பத்தில் பிறக்கிறார்கள். உடல் வளத்தோடும் வனப்போடும் மனவலிமையோடும் தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப் பெற்று வாழ்கிறார்கள். சிலர் துயரத்திலேயே பிறக்கிறார்கள். சிலர் முடமாகவும் நொண்டியாகவும் இருக்கிறார்கள். சிலர் முட்டாள்களாகவே வாழ்ந்து, வாழ்க்கை முழுவதையும் ஏதோ இழுபறி நிலையிலேயே கடத்துகிறார்கள்.

அவர்கள் அனைவரும் படைக்கப்பட்டவர்கள் என்றால், நேர்மையும் கருணையும் உள்ள கடவுள், ஒருவரை இன்பத்தில் திளைப்பவராகவும் இன்னொருவரைத் துன்பத்தில் உழல்பவராகவும் ஏன் படைக்க வேண்டும்? அவர் ஏன் அத்தனை வேறுபாடு காட்ட வேண்டும்? இந்தப் பிறவியில் துன்பப்படுபவர்கள் அடுத்த பிறவியில் இன்பம் அடைவார்கள் என்று கூறுவதும் பொருந்தாது. நேர்மையும் கருணையும் கொண்ட கடவுளின் ஆட்சியில் ஏன் ஒருவர் துயருற வேண்டும்?

ஆகவே, படைப்பாளராகிய கடவுள் ஒருவர் இருக்கிறார் என்று கொள்வது இந்த முரண்பாட்டைத் தெளிவு படுத்தவில்லை. மாறாக எல்லா, வல்லமையும் வாய்ந்த ஒருவரின் கொடுங்கோன்மையையே காட்டுகிறது. அப்படியானால், ஒருவன் மகிழ்வதற்கோ துயரத்தில் உழல்வதற்கோ உரிய காரணங்கள், அவர் பிறப்பதற்கு முன்பே இருந்திருக்க வேண்டும். அவையே அவனது முற்பிறப்பின் வினைகள்.


# தென்னாபிரிக்கா அணி

அதிரடிக்கு




டிவில்லியர்ஸ்

நிதானத்திற்கு




கலிஸ்

சரவெடிக்கு




மோர்கல்

மிரட்டலுக்கு




ஸ்ரைன்

சுழலுக்கு



போத்தா


வேகத்திற்கு



கிசொற்சோபே

தென்னாபிரிக்க அணிக்கு தலைவர் கிரஹம் சிமித். இந்த உலகக் கிண்ணத் தொடருடன் சிமித்தின் அணித்தலைவர் பதவி முடிகிறது.

அதிரடிக்கு டிவில்லியர்ஸ் காத்திருக்கிறார். நிதானத்திற்கு கலிஸ் இருக்கிறார். சரவெடிக்கு மோர்கல் உள்ளார். இன்னும் அம்லா, டுமினி, வரிசையில் இந்தியத் துணைக் கண்டத்தில் விளையாடிய அனுபவம் வாய்ந்த பாகிஸ்தானைச் சோந்த இம்ரான் தாசீர் வேறு இருக். கிறார்.



**அணித்தலைவர் சிமித்**

**2003 - 2011**

| | |
|---|---|
| ஆட்டம் | -83 |
| வெற்றி | -38 |
| தோல்வி | -24 |
| முடிபு தெரியாதவை | -21 |

**பலம்**

கட்டுக் கோப்பான அணி

**பலவீனம்**

துரதிஷ்டம்

### ஓர் ஆய்வு

பந்துவீச்சில் சொல்லவே வேண்டாம். ஸ்ரையன், பார்னல், சொற்சோபே, போத்தா என ஒரு கூட்டணி.

ஒருநாள் போட்டியில் இப்போதைக்கு ஆதிக்கம் செலுத்தும் அணி என்ற பெயர் வேறு. நடப்பு சம்பியன் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் கூட சொல்லி விட்டார்.

இந்த முறை தென்னாபிரிக்காவுக்கு வாய்ப்பு என்று. ஆனால் அதிர்ஷடம் கைகூட வேண்டும்.

# பாகிஸ்தான் அபாயகரமான அணி; வேகப்புயல் அக்தர் சொல்கிறார்

கிரிக்கெட்டில் நாங்கள் காயம் பட்ட அணி; ஆனால் ஆபத்தான அணி என்று அக்தர் கூறியுள்ளார்.

**பாகிஸ்தான் அணியின் "வேகப்புயல்"**

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர். இதுவரை 160 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 244 விக்கெட்டுகள் கைப்பற்றியுள்ளார். தனது கடைசி உலகக்கிண்ணத் தொடரில் ஆட இருக்கும் அக்தர் டாக்காவில் நேற்று முன்தினம் நிருபர்களிடம் கூறியதாவது,

திறமையான வேகப்பந்து வீச்சாளர்கள் போதுமான எண்ணிக்கையில் அணியில் இருக்கிறார்கள். உமர்குல், வாகாப்ரியாஸ், நான் ஆகியோருடன் ஜுனைட் கானும் உள்ளார். எங்களால் உலகின் எந்த அணியையும் கட்டுப்படுத்த முடியும். பந்துவீச்சில் ஸ்விங் செய்வது எங்களவன் பலம். குறிப்பாக பந்து தேய்ந்த பின்னரும் 'ரிவர்ஸ்ஸ்விங்' செய்வது எங்களது ஸ்பெஷல்.

இது, நான் பங்கேற்கும் 3ஆவது உலகக் கிண்ணத் தொடர். இந்திய துணை கண்டத்தில் உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது சிறப்பு வாய்ந்த ஒன்று. இன்னும் நீண்ட காலம் விளையாட ஆசைப்படுகிறேன். ஆனால் எவ்வளவு காலம் விளையாட முடியும் என்பது பற்றி உறுதியாக சொல்ல முடி யாது.

எனது 26 வயதில் பந்து வீசியதற்கும், 36 வயதில் பந்து வீசுவதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. இப்போது நிறைய அனுபவம் பெற்றிருக்கிறேன். அதேசமயம் இன்னும் என்னால் வேகமாக பந்து வீச முடியும். மணிக்கு 145 முதல் 150 கிலோமீற்றர் வேகம் வரை என்னால் எளிதாக பந்து வீச முடியும்.

**சம்பியனாக வேண்டும்**

இந்த உலக கிண்ணத்தில் ஒவ்வொரு ஆட்டத்திலும் பங்கேற்க வேண்டும். 45-50 நாட்களில் போட்டி நிறைவு பெறும் போது உலகக் கிண்ணத்துடன் தாயகம் திரும்ப வேண்டும். இதுதான் எனது தனிப்பட்ட இலக்காகும். இது மட்டுமின்றி உலக கிண்ணத் தொடரை சொந்த மண்ணில் பார்க்கும் வாய்ப்பு இல்லாமல் போன பாகிஸ்தான் மக்களுக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுப்பது தான் சரியான பரிசாக இருக்கும்.

கடந்த ஓரிரு ஆண்டுகளாக பாகிஸ்தான் கிரிக்கெட்டில் நடந்த சம்




பவங்கள் அனைவருக்கும் தெரியும். இதனால் பாகிஸ்தான் அணி மிகவும் பாதிகக்கப்பட்டிருக்கிறது. இந்த கசப்பான சம்பவங்களும் ரசிகர்கள் கூட்டமும் இந்தியா மற்றும் இலங்கையில் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் போது சாதிக்க உந்துதலாக இருக்கும். நாங்கள் மிகவும் அபாயகரமான அணி. ஆனால் காயம்பட்ட அணியாக இருக்கிறோம்.

பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இது முக்கியமான கட்டம். எனவே சிறந்த சூழலை உருவாக்க எந்த விலையை கொடுத்தாவது வெற்றி பெற வேண்டும். இவ்வாறு அக்தர் கூறினார்.


# கடைசி உலகக் கிண்ண தொடரில் ஆடும் வீரர்கள்

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இத் தொடரில் பங்கேற்றும் 14 நாடுகளின் பல வீரர்கள் தங்களது கடைசி உலகக் கிண்ணத் தொடரில் விளையாடவுள்ளனர்.

இவ்வாறு விளையாடும் வீரர்களில் சில முன்னணி வீரர்கள் பற்றிய விபரம் வருமாறு ,

**சச்சின் டெண்டுல்கர் (இந்தியா)**



கிரிக்கெட் அரங்கின் துடுப்பாட்டத்தில் பல்வேறு சாதனைகளையும் தன்னகத்தே வைத்துள்ள 37 வயதான சச்சின் டெண்டுல்கரின் சாதனைப் பட்டியலில் விடுபட்டது உலகக் கிண்ணம் மட்டும் தான்.

உலகக் கிண்ண தொடரில் டெண்டுல்கர் பங்கேற்பது இது 6ஆவது தொடராகும். அடுத்த உலகக் கிண்ண தொடரின் போது அவருக்கு 42 வயதாகிவிடும். எனவே இதுதான் டெண்டுல்கரின் கடைசி உலகக் கிண்ணத் தொடராக இருக்குமெனக் கருதப்படுகிறது.

**முத்தையா முரளிதரன் (இலங்கை)**

கிரிக்கெட் அரங்கின் பந்துவீச்சில் கிட்டதட்ட எல்லா சாதனைகளையும் படைத்துள்ள 38 வயதான சுழல் பந்துவீச்சு ஜாம்பவான் முர



ளிதரன் உலகக் கிண்ண தொடருடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துவிட்டார்.

1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியபோது அணியில் இடம் பெற்றிருந்த முரளிதரன், மீண்டும் ஒருமுறை சொந்த மண்ணில் சாதிக்கத் தயாராக இருக்கிறார்.

இப்போதும் முரளிதரன் சுழல் ஜாலம் சாதிக்குமா? என அடுத்த சில ஆட்டங்களில் தெரியவரும்.

**திலகரட்ண டில்சான் (இலங்கை)**


கடந்தசிலஆண்டுகளாக இலங்கை அணியில் அதிரடி ஆரம் பத் துடுப்பாட்ட வீரராகத் திகழும் 34 வயதான திலகரட்ண டில்சானுக்கும்



இதுதான் கடைசி உலகக் கிண்ணத் தொடராக இருக்கக் கூடும்.

**சிவநாராயணன் சந்தர்போல் (மேற்கிந்தியத் தீவுகள்)**

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரர் 36 வயதான சிவநாராயணன்



சந்தர்போலுக்கு இது 5 ஆவது உலகக் கிண்ண தொடராகும். 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணியை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் செல்லும் போராட்டித்தில் 80 ஓட்டங்களைச் சேர்த்தார்.

ஆனால் அணிக்கு வாய்ப்பு நழுவிப் போனது. அதன் பின்னர் கடந்த உலகக் கிண்ணத் தொடர்களில் சந்தர்போலின் செயற்பாடு திருப்திகரமானதாகவில்லை.

தனது கடைசி உலகக் கிண்ணத் தொடரிலாவது மாற்றம் செய்வாரா என்பதைப் பார்க்கலாம்.

**ஜக்கலிஸ் (தென்னாபிரிக்கா)**

உலகின் சிறந்த சகல துறை வீரர்களில் ஒருவராகத் திகழும் 35 வயதான ஜக்கலிசுக்கு இதுவரை



உலகக் கிண்ணத் தொடர்களில் அதிர்ச்சிகளே ஏற்பட்டுள்ளன. 1996ஆம் ஆண்டு காலிறுதி, 1999 மற்றும் 2007இல் அரையிறுதி, 2003ஆம் ஆண்டு மழையால் சொந்த மண்ணில் முதல் சுற்றுடன் வெளியேற்றம் என்று இதுவரை மோசமான அனுபவங்களையே கலிஸ் சந்தித்துள்ளார். 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் கலிசின் அணி சாதிக்குமா?

**ரிக்கி பொன்டிங் (அவுஸ்திரேலியா)**


அவுஸ்திரேலியா அணித் தலை



வர் 36 வயதான ரிக்கி பொன்டிங் 1999, 2003, 2007 ஆம் ஆண்டுகளில் உலகக் கிண்ணத்தை சுவைத்தார். சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் தடுமாறிவருகிறார் என்றாலும் காயத்திற்கு சிகிச்சை பெற்று புத்துணர்ச்சியுடன் களம் திரும்பியுள்ளார். தனது தலைமையில் அவுஸ்திரேலியா அணி ஹட்ரிக் கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதே அவரது கனவு. (தொடரும்)

## புகழின் உச்சியைத் தொட்ட

# பிரேஸில் ஜாம்பவான் ரொனால்டோ கால்பந்து விளையாட்டிலிருந்து ஓய்வுபெறுகிறார்



உலகக் கால்பந்து பிரபலங்களில் ஒருவரான ரொனால்டோ சர்வதேச அரங்கிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். பிரேஸில் நாட்டைச் சேர்ந்த ரொனால்டோ நசாரியோ மூன்று முறை சர்வதேச கால்பந்து சம்மேளனமான பீஃபாவின் சிறந்த வீரர் விருது பெற்றவர்.

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் அதிகப்படியான கோல்களை அடித்தவர் என்ற பெருமை ரொனால்டோவுக்கு உண்டு. இதில் அவர் 15 கோல்களை அடித்துள்ளார்.

உலகளவில் 18 ஆண்டுகள் கால்பந்து விளையாட்டில் தனக்கென்று ஒரு இடத்தைப் பெற்றிருந்த ரொனால்டோ பல உச்சங்களைத் தொட்டவர். அதேபோல வீழ்ச்சிகளையும் கண்டவர்.

1996 - 97ஆம் ஆண்டுகளில் அவர் பார்சிலோனா கால்பந்து அணிக்காக ஆடியபோது கோல் போடும் இயந்திரமாகவே காணப்பட்டார். தேவைப்படும் நேரத்தில் வேகமாக ஓடி, வேகத்தைக் குறைக்க வேண்டிய சமயத்தில் அதைச் சரியாகக் கையாண்டு, குறித்த தருணத்தில் பந்தைக் கோல் வலைக்குள் தள்ளுவதில் ரொனால்டோ வல்லவர்.

பார்சிலோனாவிலிருந்து இண்டர்மிலான் அணிக்கு ரொனால்டோ மாறிய போது அவரது விளையாட்டில் ஒரு மென்மைப் போக்குத் தெரிந்தது. அவரது நகர்வுகளில் புத்திசாலித்தனமும் தந்திரங்களும் நன்றாக வெளிப்பட்டன.

எனினும் அப்போதுதான் அவரது முழங்காலில் பிரச்சினைகள் ஏற்பட ஆரம்பித்தன. தொடர்ந்து காயங்கள் ஏற்பட்டுக் கிட்டத்தட்டக் கால்பந்து விளையாட்டிலிருந்து ஓய்வுபெறும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார்.

ஆனாலும் 2002ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் பிரேஸில் வென்ற போது, அவரது கால்பந்து வாழ்க்கை ஒரு உணர்வுபூர்வமான உச்சத்தை எட்டியது. ஆனால், அதன்பின்னர் தனது உடற் தகுதியைத் தக்கவைத்துக்கொள்ள அவர் சிரமப்பட்டார்.

### ரசிகர்களின் கோபம்

2011ஆம் ஆண்டு அவரது கால்பந்து வாழ்க்கையில் ஒரு மகுடமாக இருந்திருக்க வேண்டியது. ஆனால் ரசிகர்கள் மற்றும் செய்தியாளர்களுடன் ஏற்பட்ட வன்முறை காரணமாக ஒரு கசப்புணர்வுடனேயே தான் ஓய்வுபெறுவதாக அறிவிக்கும் நிலைக்கு ரொனால்டோ ஆளாகியுள்ளார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் பரபரப்புக்கள் மற்றும் வெற்றிகளின் பின்னணியில் பிரேஸிலின் கொரிந்தியாஸ் அணியில் அவர் சேர்ந்தார். அவரது நோக்கம் இந்த ஆண்டு தென் அமெரிக்காவின் பிரபலமான லிபரேடடொர்ஸ் கோப்பையை கொரிந்தியாஸ் அணிக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே.

சாவ் பாலோவில் இருக்கும் கொரிந்தியாஸ் அணிக்கு 25 மில்லியன் ரசிகர்கள். பல முக்கிய போட்டிகளில் அந்த அணி வென்றிருந்தாலும் பிரபலமான இந்த லிபரேடடொர்ஸ் கோப்பை வென்றதில்லை.

ஆனால் இந்த ஆண்டின் முற்பகுதியில் சிறிதே அறியப்பட்டிருந்த கொலம்பிய நாட்டு அணியான டிபோர்டெஸ் டோலிமா அணியுடன் கொரிந்தியாஸ் தோல்வியடைந்தது.

மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இருந்த ரசிகர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக அமைந்தது. இந்தத் தோல்விக்கு ரொனால்டோவே காரணமெனப் பல ரசிகர்கள் கருதினர்.

இதையடுத்துப் போட்டி இடம்பெற்ற மறுநாள் சாவ் பாலோவிலுள்ள கொரிந்தியாஸ் அணியின் பயிற்சி மைதானம் முழுவதும் ரொனால்டோவை அவமானப்படுத்தும் வகையில் வாசகங்களும் படங்களும் வரையப்பட்டிருந்தன.

அதற்கு மறுநாள் அவர் பயணித்த பஸ் மீது ரசிகர்கள் கல்லெறிந்த சம்பவம் இடம்பெற்றது. இதற்குப் பின்னர் அந்தத் தோல்விக்குத் தனது பங்கை ருவிட்டரில் அவர் தெரியப்படுத்தினார்.

கொரிந்தியாஸ் அணியின் மற்றொரு பிரபலமான நெட்டோ, கால்பந்து விளையாட்டில் காசுக்காகவே விளையாடும் ஒரு கைக்கூலி என ரொனால்டோவை விமர்சித்தார்.

இப்படியான பின்புலங்களில் கால்பந்து விளையாட்டிலிருந்து ரொனால்டோ விடைபெறுகிறார்.

# உலகக் கிண்ணத் தொடரில் அணிகளைக் குறைக்கத் திட்டம்

## ஐ.சி.சி. தகவல்

உலகக் கிண்ணப் போட்டிகள் நீண்ட நாட்கள் நடப்பதற்கு அதிக அணிகள் பங்கேற்பதுதான் காரணம். இது ரசிகர்களிடையே சலிப்பை ஏற்படுத்தும். எனவே கத்துக்குட்டி அணிகளை வெளியேற்றிச் சிறந்த 10 அணிகள் மட்டுமே விளையாடும் வகையில் அடுத்த 2015 உலகக் கிண்ணப் போட்டிகளைத் திட்டமிட வேண்டும்.

பழைய நடைமுறைகளை விடுத்துப் புதிய முறைகளைப் பின்பற்றிக் கிரிக்கெட்டை வளர்க்க வேண்டும் என சர்வதேச கிரிக்கெட் சபையில் கோரிக்கை எழுந்துள்ளது.

இது குறித்து ஐ.சி.சி. சார்பில் இணையத்தளத்தில் வாக்கெடுப்பு நடந்தது. இதில் வரும் 2015 உலகக் கிண்ணத் தொடரின் போது 16 அணிகள் பங்கேற்கலாம் என்பதற்கு ஆதரவாக 73 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர். 10 அணிகள் கருத்துக்கு ஆதரவாக வெறும் 9 சதவீத வாக்குகளே கிடைத்துள்ளன.

ஆனாலும் 10 அணிகள் பங்கேற்கும் உலகக் கிண்ணத் தொடரே சிறந்தது என ஐ.சி.சி. கருத்துத் தெரிவித்துள்ளது. இதற்காக அணிகளைத் தேர்வு செய்யும் தகுதிப் போட்டிகள் நடத்தவும் அது திட்டமிட்டுள்ளது.

# முரளிதரன் - '800'



இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரும் கிரிக்கெட் வரலாற்றில் முன்னணியில் திகழ்பவருமான முத்தையா முரளிதரன் சுயசரிதை எழுத ஆரம்பித்துள்ளார். இச்சுயசரிதைப் புத்தகம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் விற்பனைக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த புத்தகத்திற்கு '800' எனப் பெயரிடப்பட்டுள்ளது. முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஈட்டிய விக்கெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டே இப்பெயரிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

38 வயதான முத்தையா முரளிதரன் கடந்த வருடம் டெஸ்ட் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவுக்கு புதிய...

கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்டின் உதயன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், தீவகம் வடக்கு பிரதேச செயலாளர் சிறிமோகனன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாணப் பணிப்பாளர் மரியதாஸ், நிறைவேற்றுப் பொறியியலாளர் சுதாகர், வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் சிவநேசன், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன், தீவக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பிரேமரட்ண, தீவக கடற்படைக் கொமாண்டர் நிசாந்த, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் பொதுமக்களும் பங்கு கொண்டனர். (ந-5)

# சட்ட விரோத மின்பாவனை ஒரு இலட்சத்து 60 ஆயிரம் தண்டம்

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுபவர்களுக்கு எதிராக இலங்கை மின்சார சபையினரும்,பொலிஸ் பிரிவினரும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் பல பிரதேசங்களில் நேற்று திடீர் சோதனை நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸ் மற்றும் கொழும்பிலிருந்து வந்துள்ள இலங்கை மின்சார சபையின் விசேட குழு ஆகியன இணைந்து 16 பேருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்தனர்.

நல்லூர்,கோப்பாய்,யாழ்ப்பாணம் போன்ற பல பகுதிகளில் சட்டவிரோத மின்சாரம் பெற்றவர்களிற்கு எதிராகவே இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேலும் 16பேர் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதால் மின்சார சபைக்கு 2அரை இலட்சத்திற்கு மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதனை ஈடு செய்யும் வகையில் தலா 10ஆயிரம் ரூபா வீதம் 16 பேருக்குமாக ஒரு லட்சத்து 60ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேற்படி தண்டப்பணத்தை செலுத்தத் தவறுபவர்கள் ஒருமாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி எ.எ.ஆனந்தராஜா தீர்ப்பளித்தார். (ந-6)

# பாலித ஹோகனவுக்கு...

தேச அனுசரணையுடன் வெள்ளைக் கொடியை ஏந்தியவாறு சரணடையச் சென்ற விடுதலைப் புலிகளின் தலைவர்களை சுட்டுப் படுகொலை செய்த போர்க்குற்றத்தில் கூட்டுப் பொறுப்புடையவர் என்ற அடிப்படையிலேயே அவர் மீது இவ்வழக்கு தொடரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாலித ஹோகன மீது வழக்குப் பதிவு செய்யப்படவுள்ளதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் இனப் படுகொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பும் சுவிட்சர்லாந்து ஈழத் தமிழர் பேரவையும் தெரிவித்துள்ளன.

வன்னியில் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது இலங்கை அரசாங்கத்தின் செயலாளராகப் பணியாற்றிய பாலித ஹோகன, அவுஸ்திரேலியாவின் குடியுரிமையையும் பெற்றுள்ளார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி சர்வதேச அனுசரணையுடன் சரணடையச் சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் நடேசன், சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் மற்றும் பல போராளிகள் படைத்தரப்பால் சுட்டுக் கொல்லப்பட்டனர் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு சுட்டுக்கொல்ல உத்தரவிட்ட படைத்தரப்பின் 58ஆவது படைப்பிரிவின் தளபதி சவேந்திர சில்வாவுடன் பாலித ஹோகனவுக்கும் கூட்டுப் பொறுப்பு உள்ளது என சர்வதேச போர் நியமங்களின் அடிப்படையில் இவ்விரு அமைப்பினரும் இவ்வழக்கை பதிவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அண்மையில் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்றிருந்த போதும் அவருக்கு எதிராக நட்டஈடு கோரி இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பு வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## இன்றைய பயிற்சி ஆட்டங்கள்

**அயர்லாந்து**
எதிர்
**சிம்பாவே**
நேரம்: காலை 9.30 மணி
மைதானம்: நாக்பூர்

**கென்யா**
எதிர்
**நெதர்லாந்து**
நேரம்: காலை 9.30 மணி
மைதானம்: கொழும்பு

**பங்களாதேஷ்**
எதிர்
**பாகிஸ்தான்**
நேரம்: மாலை 2.30 மணி
மைதானம்: மிர்பூர்

**அவுஸ்திரேலியா**
எதிர்
**தென்னாபிரிக்கா**
நேரம்: மாலை 2.30 மணி
மைதானம்: பெங்களூர்

**இலங்கை**
எதிர்
**மேற்கிந்தியத் தீவுகள்**
நேரம்: மாலை 2.30 மணி
மைதானம்: கொழும்பு

# தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதை உறுதி செய்க

## அரசாங்கத்திடம் ஐ.தே.க கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதி தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக நேற்று பிற்பகல் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தேர்தல் ஆணையாளரிடம் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

இச்சந்திப்பின் போது யாழ்.தீவுப் பகுதிகளிலும் முகாம்களிலும் சுதந்திரமாகத் தேர்தல் பரப்புரைகளை ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் மேற்கொள்ள இராணுவம் அனுமதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

முகாம்களின் வாக்குகளை இல்லாமல் செய்ய அரசாங்கம் தேர்தல் வாக்குச் சாவடிகளைத் தூரப் பிரதேசங்களில் அமைத்திருப்பதாகவும் இதனால் 70 கிலோ மீற்றர் தூரம் சென்று வாக்களிக்க வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளதாகவும் இச்சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் தமிழர்களின் வாக்குகளைக் குறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் ரவி கருணாநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (ந-5)

# தென்பகுதி தனியார் நிறுவனங்களில் பணிக்கு சேரமுன் தகவலைப் பெறுக

## வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியிலிருந்து புதிதாக வரும் தனியார் நிறுவனங்களில் பணிக்கு சேர முதல் யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்தில் தொடர்பு கொண்டு அந்நிறுவனம் தொடர்பில் உறுதித் தன்மையைப் பெற்றுக் கொள்வது பாதுகாப்பானது.

இவ்வாறு வட மாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கணேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து புதிய கிளையை நிறுவிய இரண்டுதனியார் நிறுவனங்கள் திடீரென கிளையை மூடிவிட்டு சென்றுள்ளன.

எனினும் குறித்த இரு நிறுவனங்களில் பணிபுரிந்த ஊழியர்களுக்கு சம்பளங்கள் முழுமையாக வழங்கப்படவில்லையென முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள முயற்சித்த போதும் அந்நிறுவனங்களின் தொடர்பு கிடைக்கவில்லை. இந்நிலையில் குறித்த முறைப்பாடுகள் எமது தலைமையகத்திற்கு நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே தென்பகுதியிலிருந்து ஆதாரமானபதிவுச்சான்றிதழ்களின்றி யாழ்ப்பாணத்திற்குவருகைதரும் தனியார் நிறுவனங்களில் பணிக்குச் சேரமுன் யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்துடன்தொடர்புகொண்டு அந்நிறுவனம் தொடர்பில் உறுதிப்படுத்துவது பாதுகாப்பானதாகும்.

இவ்வாறு வட மாகாண பிரதித் தொழில்ஆணையாளர்கே.கணேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-5)

# பொன்சேகாவின் வழக்கு விசாரணை

## பிரதிகளை ஒப்படைக்க உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி சரத் பொன்சேகா தொடர்பில் இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையின் அனைத்துப் பிரதிகளையும் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் படைத்தளபதிக்கு உத்தரவிட்டுள்ளது.

ஹைகோப் நிதி மோசடி தொடர்பில் சரத் பொன்சேகாவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இராணுவ நீதிமன்றம் அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என அண்மையில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதாக சரத் பொன்சேகா சார்பில் நீதிமன்றத்தில் சமுகமளித்த சட்டத்தரணிகுறிப்பிட்டார்.

இத்தகைய நீதிமன்றில் ஹைகோப் வழக்கின் சந்தேக நபரான சரத் பொன்சேகாவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனச் சட்டத்தரணி வாதிட்டுள்ளார்.

அதனால் குற்றச்சாட்டிலிருந்து தமது கட்சிக்காரரான சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு சட்டத்தரணி கேட்டுக்கொண்டார்.

இக்கருத்துக்களில் கவனம் செலுத்திய மேல் நீதிமன்ற நீதிபதி இதுகுறித்துப் பரிசீலிக்க இரண்டாம் இராணுவ நீதிமன்றத்தில் இடம் பெற்ற வழக்கு விசாரணையின் அனைத்துப் பிரதிகளையும் சமர்ப்பிக்குமாறு படைத் தளபதிக்கு உத்தரவிட்டுள்ளதுடன், இக்குறித்த பிரதிகளை ஆராய்ந்து சரியான தீர்ப்பு ஒன்றை வழங்குவதாகவும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார். (ந-5)

# கருணாவுக்கும், கே.பி...

1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் கடந்த காலங்களில் இழைத்துள்ள தவறுகளின் அடிப்படையில் எந்தவொரு கட்டத்திலும் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கவோ சமரசம் செய்து கொள்ளவோ முடியாதெனவும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

மேற்குறித்த சட்டப்பிரிவின் ஐந்து விதிகளின் பிரகாரம் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்க முயற்சிப்பது வழக்குத் தொடராமல் இருக்க தீர்மானிப்பது அல்லது அதற்குத் துணை செய்வது என்பன கூட கடும் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அத்துடன் அவை அரசியலமைப்பை மீறும் செயல்களுமாகும்.

அந்த சட்ட விதிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் ஈடுபடும் நபர்களுக்கான தண்டனைகளும் அதன்பக்கத்தில்குறிப்பிடப்பட்டுள்ளன.

114. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக போரிட முயற்சித்தல் அல்லது அதற்கு துணை செய்தல்- இக்குற்றத்தில் ஈடுபட்டவர்களை வாரண்ட் இன்றிக்கைதுசெய்ய முடியும். பொது மன்னிப்பு வழங்கவேமுடியாது சமரசம் செய்து கொள்ள முடியாது.

115. இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக அரச விரோத சதிகளில் ஈடுபடல்- இக்குற்றத்திற்காக இருபது வருட சிறைத்தண்டனை அல்லது கடும் தண்டப்பணம் விதிக்கப்படலாம்.

116. இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் சேகரித்தல்- இக்குற்றத்தில் ஈடுபடுகின்றவர்களை வாரண்ட் இன்றிக் கைது செய்யமுடியும் .பொது மன்னிப்பு வழங்க முடியாது. சமரசத்துக்கு இடமில்லை. சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட வேண்டும்.

117. இலங்கை அரசாங்கத்துக்கெதிராகயுத்தம்புரியும்நோக்கில்அதற்கான விடயங்களை மறைத்தல்- இதற்கு பத்து வருடங்கள் சிறைத் தண்டனை அல்லது தண்டப்பணம் விதிக்கலாம்.

120. இலங்கை அரசாங்கத்தின் மீது அதிருப்தியை உருவாக்குதல் மற்றும் உருவாக்க முயற்சித்தல்- இக்குற்றத்தில் ஈடுபட்டவர்கள் பதினாறு வயதுக்கு கீழ்ப்பட்டவராகவோ அல்லது கர்ப்பிணியாகவோ இருக்கும் பட்சத்தில் மாத்திரமே தண்டனையிலிருந்து விதிவிலக்களிக்க முடியும்.

அவ்வாறில்லாத பட்சத்தில் நிச்சயமாக மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும். அல்லது கட்டாயமாக 20வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டாக வேண்டும்.

அதிலும் பதினாறு வயதுக்குட்பட்டவரைக் கூட விரும்பிய காலம் வரை தடுத்து வைத்திருக்கலாம். கர்ப்பிணியை கூட ஆயுள் தண்டனைக்குட்படுத்த முடியும். அத்துடன் அவர்களின் சொத்துகள் அரசுடைமையாக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் பார்க்கும் போது ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர் சட்டமா அதிபர் ஆகியோர் கே.பி மற்றும் கருணா மீது வழக்குத் தொடராமல் இருக்கமுடியாது என்றும் சட்ட வல்லுநர்கள் கூறியுள்ளனர். (ந-5)

# அறிவித்தல்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் (15.02.2011) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த பாவித்த பழைய பொருட்களின் ஏலவிற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் குறிப்பிட்ட 15.02.2011இல் நடைபெறமாட்டாதென்பதனை அறியத் தருகின்றேன். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

வைத்திய கலாநிதி (திருமதி) பவானி பசுபதிராஜா<br>
பணிப்பாளர்<br>
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-2452)

# வடக்கில் சில வாக்குச்...

தேர்தலை சுதந்திரமாகவும், நீதியாகவும்நடத்த எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் உறுதியளித்துள்ளார்.

வடக்கிலுள்ள சில வாக்குச் சாவடிகளுக்கு 70 கிலோமீற்றர் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. வாக்காளர்கள் முகாம்களில் இருக்கின்றனர். இவர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை செய்து கொடுக்குமாறு நாம் தேர்தல் ஆணையாளரைக் கேட்டுள்ளோம்.

தமிழ் வேட்பாளர்கள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளத் தடை காணப்படுகின்றது. ஆளும் கட்சியின் வேட்பாளர்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்க் கட்சியினருக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. எதிர்க்கட்சியினர் பாதுகாப்புத் தரப்பின் அனுமதிகளை பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டு உள்ளதாகவும்அத்தநாயக்க கூறியுள்ளார். (ந-5)

# சாவகச்சேரியில்...

ஒருவர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் ஏனைய 5 பேரையும் கைதுசெய்த பொலிஸார், வெள்ளைவானையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 5 பேரையும் பொலிஸார் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


J.T.I 1983 ஆண்டு முதல் தொழிற்பயிற்சியை நடத்தும் ஒரே நிறுவனம்

தொழிற் பயிற்சிகள்



ஆரம்பம்:- 19.02.2011, 20.02.2011

Mobile phone repairing — காலம் 3மாதம்

Radio Televison repairing — காலம் 9மாதம்

Electrical Wiring — காலம் 3மாதம்

Rewinding — காலம் 3மாதம்

Airconditioning — காலம் 6மாதம்

Computer Hardware Engineering — காலம் 3மாதம்

O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்

சகல பயிற்சிகளும் முழுநேரசெயல்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ்வழங்கப்படும்.

விபரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTED

45, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். T.P 0718561654, 0750404003

New Asisn Center 56/15B ஸ்ரான்லிவீதி [சம்பத்வங்கி அருகாமை] யாழ்ப்பாணம் T.P 0779254078

(3819)


# மேற்குலக...

டுள்ளதாக திவயின ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தனது உடல்நிலை குறித்து வெளியாகியுள்ள செய்தி தொடர்பாகவும் எகிப்தில் சர்வாதிகார ஆட்சிக்கு ஏற்பட்ட தலைவிதி பற்றியும் ஜனாதிபதி மிகவும் கவலை அடைந்திருப்பதாக அலரிமாளிகைத் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் இராசையா கோபாலகிருஷ்ணன்



கடந்த 16.01.2011 அன்று எமது குல விளக்கு இறைபதமடைந்த செய்தி கேட்டு ஓடிவந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி ஊடாகவும் கண்ணீர் அஞ்சலி ஊடாகவும் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் இறுதிக்கிரியையில் பங்கு கொண்டோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன்

இன்று 15.02.2011 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்வதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குபெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோபலகம், மாவிசந்தி,<br>
அல்வாய் தெற்கு, அல்வாய்.

(3811)

குடும்பத்தினர்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.